பாரதி தமிழ்.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1938 ஏப்ரல் 1. { இதழ் 12.

கைம்மை நீக்கம்.

(பாரதி தாஸன்.)

இராகம் தேசிக தோடி-தாளம் ரூபகம்.

("தேடி வந்தேனே வள்ளி மானே" என்ற மெட்டு)

பல்லவி.

நீ எனக்கும், உனக்கு நானும்—இனி
நேருக்கு நேர் நின்றிக்கும் பாலும், தேனும் (நீ)

அநுபல்லவி.

தூய வாழ்வில் இதுமுதல் நமதுளம்
நேய மாக அணைவுற உறுதிசொல்! அடி! (நீ)

சரணங்கள்.

கைம்பெண் என் றெண்ணம் கொண்டே
கலங்கினா போகற் கண்டே!

ROJA MUTHIAH
KOTTAIYUR—623 108

பகுத்தறிவு

காடு வேகு வதை ஒரு மொழியினில்
மூடு போட முடியுமோ உரையடி? தகி (நீ)

பைந்தமி ழைச்சீ ராக்கக்
கைம்மை என் னும்சொல் தீக்கப்
பறந்து வாடி அழகிய மயிலே!
இறந்த கால நடைமுறை தொலையவே (நீ)

பகுத்தறிவான மன்று
பாவை நீ எறி நின்று
பாரமூடன் எதிரினிற் பழஞ்செயல்
கோரமாக அழிந்தொழிகுவதையே (நீ)

கருத்தொருமித்த போது
கட்டுக்கள் என்ப தெது?
கைம்மை கூறும் அநியய மனிதர்கள்
செம்மை யாகும் படிசெய மனதுவை! (நீ)

அறிவுச் சுடர்.

நாட்டின் முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும்—நுங்கள் காயுடு ஆதியில் எப்படியிருந்தது என்றும் தங்கள் சமூக ஆதியில் எப்படியிருந்தது என்றும் கண்டு பிடிப்பதில் அடங்கியிருக்கவில்லை.

* * *

சடங்குகள் அனைத்தும் தமது சுயநன்மைக்காகப் பார்ப்பனர் ஏற்படுத்தியவைகளே யன்றி அவற்றால் நமக்கு யாதொரு நன்மையும் இல்லை.

* * *

புராதனவழக்கங்களெல்லாம் உயிரற்றனவே யாதும். அவைகளால் முன்னேற்றத்திற்குத் தடையுண்டாகின்றன.

* * *

காதினால்கேட்கச் சகியாதனவாயும், வாயினால் சொல்லக் கூடாதனவாயும் உள்ள ஆபாசமொழிகள் நிறைந்துள்ள வேதங்களைக் கடவுள் உண்டாக்கினார் என்பது எவ்வாறு பொருந்தும்.

"பார்ப்பனீயப் படுகொலை"

(ஆர்தர் மைல்ஸ் என்ற ஆங்கில ஆசிரியர், எழுதிய பிரக்யாதி பேற்ற, ''லாண்ட் ஆப் தி லீங்கம்'' (Land of the Lingham) என்ற புத்தகம், சில நாட்களுக்கு முன்புதான் வெளியாயிற்ள் என்றாலும் இந்த சொற்பகாலத்தில் அப்புத்தகம் நீ-பதிப்புகறு வெளியாகி இருப்பதே அப்புத்தகத்திற்கு ஒரு நற்சாட்சிப் பத்திர மாகும். அப்படிப்பட்ட புத்தகத்தில் ஆசிரியர், பார்ப்பனீயத்தைப் பற்றி விளக்கும் பகுதியின் சாரத்தை நாம் கீழே தருகிறோம். இதில், பண்டைய (பார்ப்பனரல்லாதார்) ராஜ்யம் அழிந்த விதம்-பார்ப்பனக்கொடுமை—ஜாதி ஆணவம்–அதனால் வந்த கேடுகள்–பார்ப்பன சுயநலம்—மூடப்பழக்க வழக்கம்—பார்ப்பனீயமும் சீர் திருத்தமும் போன்றவைகள், ஆசிரியரால் அனுபவ ஆதார பூர்வ மாக விளக்கப்பட்டுள்ளன. இப்புத்தகம் இந்தியாவில் பார்ப் பனர்கள் தன்மை எப்படிப்பட்டது; புரோகிதத்தின் பேரால் எப்படி கொள்ளை அடிக்கப்படுகின்றது என்பவைகளையும் பார்ப்பன கடவுள் புராணம் என்பவைகளையும் விளக்கிக் காட்டி எழுதப்பட்டதாகும். இதில் பார்ப்பனர் என்ற தலைப் பில் உள்ள பாகத்தின் குறிப்பு இது.)

ராஜ்யத்தைக் கவிழ்க்க பார்ப்பனர் சதி!

மூதுகெலும்பின்றி, பார்ப்பனரின் அடிபணிந்து, அவர்களின் அடிமைகளாக மக்கள் தயாராக இருந்ததாலேயே, அசோக சாம் ராஜ்யம் அழிந்தது. அந்தக்காலத்து (பார்ப்பனரல்லாத) "சுங்க" மன்னன், தனது ஆதிக்கத்தை அதி வேகமாகச் செலுத்தினான். புத்தமதத்தை தன் ராஜ்பத்தில், புகுத்தினான். அவனுக்குப் பிறகு குழப்பம் ஏற்படலாயிற்று. அந்த புத்த மன்னன் என்று சாவானோ என்று சதா கார்த்துக்கொண் டிருந்த பார்ப்பனர்கள், அவனுடைய மரணத்திற்குப் பிறகு தங்கள் சூழ்ச்சியாலேயே ஒரு மாறுதல் ஏற்படச் செய்தனர். சமஸ்தான, சேனாதிபதிக்குஒரு பார்ப்பனத்தி மனைவியானாள். அதன் பயனாய் சூழ்ச்சிக்காரப் புரோகிதக் கூட்டத்தினர், சேனாதிபதியை தம் பக்கம் சுலபத்தில் திருப்பிக் கொள்ள முடிந்தது. அரசனுடைய வாரிசுதார், கொல்லப்பட்டார். பார்

கொன்றார்கள் என்பது கூடதெரிய முடியாமலே கொல்லப் பட்டனர். அரசனது வார்சுகள் கொல்லப்பட்ட உடன் சேனாதிபதியின் மகன் (பார்ப்பன மனைவிக்கு பிறந்தவன்) பட்டமடைந்தான். மூதுகெலும்பற்ற (குடிகள்) அப்போதைய மக்கள் யாரோ வேறு பாம்பரைக்காரன் அரசாள்வதைப் பற்றி சிறிதும்கவலை கொள்ளா மல்பார்ப்பனீயத்திற்கு அடிமை யானார்கள்.

சேனாதிபதியின் மகனான அக்கினி மித்திரர் ஆட்சியிலே, புத்தமத இலக்கியங்கள் இந்துமத இலக்கியங்களாக உருமாற் றப்பட்டு இந்து மதக் கிரந்தங்களுடன் சேர்க்கப்பட்டன. எதனையும் எடுத்து விழுங்கிஜீரணமாக்கிக் கொள்வது இந்து மதத்தின் சக்தி! பிறப்பினால் ஜாதி உண்டென்பதும் அதற்கு பூர்வ கர்மமேகாரணம் என்பது மான தத்துவம் நிலை நிறுத்தப் பட்டது.

தற்குறிகளே தாசர்களாயினர்.

திபெத் நாட்டில் ஒருகூட்டபார்ப்பனர்கள் மகாத்மாக்களாகி இரகசிய மத சங்கங்களை ஏற்படுத்தினார்கள், அதன் மூலம் (அடுத்த) மேல் உலக வாழ்விற்காக மக்களுக்கு "இன்ஷ் யூர்" செய்யும் ஏக போக உரிமையைப் பெற்றனர். குருட் டுப்பழக்கம், மாய ஜாலங்கள்மூலம், மக்களை அவர்கள், அன் றும் இன்றும், அஞ்ஞானத்தில் அழுத்தி வைத்துள்ளனர். தற் குறிகளான மக்களிடை, புரோகிதர், அன்றும் இன்றும் ஆதிக் கத்தைப் புகுத்தி ஆட்சி செலுத்துவதைப்பற்றி ஆச்சரியப்படு வதற்கில்லை. ஆனால் நீண்டஅங்கி தரித்து மேல் நாடுகளுக் கும் சென்று அங்கும் அளக்கும் இந்த ஏமாற்று வித்தையில் சொக்கி விடும், மேனாட்டுப் பேர்வழிகளை என்னென் போம், அவர்களை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டியதுதான்!

மேல்நாட்டிலுள்ள "கீழ்நாட்டுமாந்தரீகக் கோஷ்டி"யினரின் ஆஷாடபூதி குணத்தையும், மிருதுவான குரலையும் கண்டு, மயங்கி காசு பணம் கொடுத்து ஆதரிக்கும் அங்கத்தினர்கள், இந்தியா சென்று தங்கள் பணம்எப்படி "ஏழைகளுக்கு"ப் பயன் படுகிறது என்பதைப்பார்ப்பது நல்லது. மிருதுவான குரல்படை த்த அந்த பிச்சைக்காரர்கள் பார்ப்பனர்களே. இவர்கள் ஏழை களை கால் தூசுக்குச் சமானமாகவே கருதுகிறார்கள்.

"ஏழை போன ஜென்மத்தில் அவன் செய்த பாபத்தின் காரணமாக துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்பான்! அல்லது கர்ம ஏணியின் கடைசி படியிலிருந்து மேலேறிக்கொண்டிருப்பான்! போன ஜென்மத்தில் அவன் ஏதாவதொரு மிருகமாக இருந்திருப்பான்! இந்தத்தடவைதான் மானிட ஜென்மம் பெற்றிருப்பான்"! என்று கருதப்பட்டவர்கள் பார்ப்பனருடன் சரிசமமாக, மூச்சுவிட முடியுமா? கடவுளும் அவரின் பிரதிநிதிகளான பூலோகத்திலுள்ள புரோகிதர்களும் அனுமதிதர மறுக்கும் காரணத்தால் நோய் தீர்த்துக்கொள்ள, வைத்தியசாலைக்கு வரமறுக்கும்மக்களிடம், மேனாட்டான் என்ன போதனையைச் செய்ய முடியும்! புரோகிதக்கொடுமை, சட்டதிட்டங்களினின்றும் ஏழைகள் மீள மார்க்கமில்லை.

"பிராமணா மமதேவதா"

புரோகிதர்களுக்கும், உயர்ஜாதி பார்ப்பனருக்கும், "தானம்" அளிப்பதை ஒரு இந்து மிகவும் முக்கியமானதாகக் கருதுகிறான். ஒருவன் எவ்வளவு பெரிய 'பாவம்' செய்திருந்தபோதிலும், அதற்கேற்ற அளவு 'தானம்' அளித்து விட்டால் அந்தப்பாவம் துடைக்கப்பட்டு விடும் என்பது அவன்நம்பிக்கை.உதயபூரில் அந்தக்காலத்தில்அடித்ததைப் போல், இன்றுகொள்ளை அடிக்க பார்ப்பனரால் முடிவதில்லை. அந்தக்காலத்தில் ஆசாரை ஒரு தட்டில்வைத்து மற்றொரு தட்டில் தங்கம் போட்டு சரி இடை நிறுத்து, தானம் தருவார்கள்! மகாராஜா எவ்வளவுக்கெவ்வளவு எடை அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு பார்ப்பனர் பாடு கொண்டாட்டந்தான்! ஏனெனில் ஆசார் நிறைக்கு நிறை போடப்படும் தங்க வெள்ளியை, புரோகருக்கும் பார்ப்பனருக்குந்தானே பங்கு போட்டுத் தரப்படும்!

பிளேக்கும்—புரோகிதனும்.

நான்மைசூரில் இருந்தபோதுஎன் தோட்டக்காரன்குழந்தைக்கு சீத பேதிகண்டது. ஆகவேகுழந்தையை சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தேன். இதனை ஒரு புரோகிதன் கேள்விப்பட்டதும், கிருஸ்தவ ஆஸ்பத்திரியைவிட்டுக்குழந்தையை அழைத்துக்கொண்டு வந்துவிடவேண்டுமென்று "தேவி" வற்புறுத்துவதாகத் தோட்டக்காரனுக்குச் சொல்லிவிட்டார். நான் தடுக்க முயன்றேன், சாயவில்லை. குழந்தையை வீட்டிற்கே அழைத்துப்போய்விட்டார்கள். குழந்தை ஆஸ்பத்திரியிலிருக்கையில் 'பிளேக்' அவர்கள் வீட்டுப்பக்

கம் பாவி இருந்தது. ஏற்கனவே இளைத்துப் போயிருந்த குழந்தைக்கு, சடுதியில் 'பிளேக்' கண்டது. இரண்டு தினங்களில், இறந்து விட்டது. இருபதுநாள் "சாவுத் தீட்டு"க்குப் பிறகு, தோட்டக்காரன் திரும்பிவந்தான். அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து, பிளேக்பாவியிருந்த அவன் வீட்டிற்கே நான் அனுப்பி விட்டேன். 'தேவி' குறிக்கிடாதிருந்து, அவனும் குழந்தையை ஆஸ்பத்திரியிலேயே விட்டுவைத்திருந்தால், அவன் குடும்பத்துடன், என் வீட்டுக்கொட்டகையில் தங்க வேண்டுமெனநான் வற்புறுத்தியிருப்பேன், 'தேவி'யின் சக்திபெற்ற பார்ப்பனப் புரோகிதனுடையமிரட்டலுடன் நான் போட்டியிட முடியுமா! "நீசன்" கையால் (ஆஸ்பத்திரியில்) மருந்துசாப்பிடுவதை விட, தூர்காற்றமடிக்கும் ஒரு கோயிலில் பலி கொடுப்பது அல்லது 'விளக்கு' வைப்பது போன்றவைகளே மேலென், பது தோட்டக்காரன் எண்ணம்.

பார்ப்பன பீகூ வின் அகம்பாவம்.

"ஒரு நாள் காலை, என் வேலையாள், யாரோ ஒரு உயர் ஜாதி பார்ப்பனப் பிச்சைக்காரன் என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னான். பிச்சைக்காரன் தனக்கு என்ன தேவை என்பதை, வேலைக்காரன்மூலம்சொல்லி அனுப்பவும்மறுத்தான். இப்படிப்பட்ட ஆசாமி, யார்எனப் பார்க்க நான், கீழே இறங்கி வந்தேன். அழகிய கலைபோட்ட வேஷ்டி கட்டிக்கொண்டு, சால்வையை மேலே போர்த்துக்கொண்டு, இருந்த அந்த பார்ப்பனன் தன் கைகளை பின்புறம்கட்டியவண்ணம் நிமிர்ந்து நின்று சற்று அகம் பாவத்துடன், பார்த்து தலையை சிறிது ஆட்டினான். அது மற்றவர்களைக் கீழானவர்களென மதிக்கும் ஆணவம் கொண்ட பார்ப்பனப் பார்வை என்பது எனக்கு நன்றாய் விளங்கிற்று. அவன் வந்த காரியம் தான் இரண்டாம் தரம் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகவும், அதற்காகப் பணம் தேவை என்றும் என்னைக் கேழ்க்க வந்ததாகும். இதைப் பார்த்தவுடன் நான் அவனுக்கு உதவிசெய்வதைப் பெரிய பேறு எனக் கருதுபவன் நானல்ல என்பதைக் காட்டி விட்டேன். மேலும், பணம்தேவையானால், அதைஎதாவது ஒருவேலைசெய்து பெறவேண்டுமெனக் கூறாமல் இருக்கவும் முடியவில்லை, ஆதலால் எதிரில் கிடந்த விறகுக் கட்டையை வெட்டும்படி ஜாடைகாட்டினேன். அவன் அகம்பாவமாக உறுமிக்கொண்டு, பின் புறம் கட்டிய கைகளை எடுக்காது, நிமிர்ந்தவண்ணம் சென்றான்; பார்ப்பனன் கேட்ட

தைக் கொடுக்க மறுத்துவிட்டதால், மேல் உலகப்பேறு எனக்கு வாவிருந்ததை இழந்துவிட்டேன்!

மந்திரம் அந்தபாச்சா என்னிடம் பலிக்காது.

நான் பெங்களூரில் இருந்தபோது, பிரபல இந்து சமூகத்தைச் சேர்ந்த, மூன்று பார்ப்பனர்கள் என் வீட்டிற்கு வந்தனர். கடவுள் தன்மையைப்பற்றியும், பிரபஞ்ச மாயையைப் பற்றியும், அவர்கள் எனக்கு கூறினார்கள். தன் மனதிற்கு உகந்த விதத்திலே, உலகைத் திருத்தி அமைக்கவே, சிவபிரான் தற்சமயம், உலகை அழித்து வருவதாக அவர்கள் கூறினார்கள். போகும்போது அவர்களில் ஒருவன், என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்தான். "பவதிபிக்ஷாந்தேஹி" கடிதந்தான் அது! அவனுக்குப் பணந்தேவை. என்னிடம் பணம் இருந்ததால், கொடுக்க வேண்டும்! கொடுக்கும் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாதெனவும், ஆனால் அதற்கேற்றதை 'சேவை' மூலம் சரிப்படுத்துவதாகும், அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. அது என்ன சேவை என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை எனெனில், நான் பணத்தை எடுக்கவில்லை! என் கண்மனத்தைப் போக்க, அந்த பார்ப்பனன், மாந்தரீகத்தை உபயோகித்தான். அவன் உச்சாடனம் செய்யும் மந்திரம் வெகு எளிதாக வேலைசெய்யும் என்ற நம்பிக்கை அவனுக்கு அபாரமாக இருந்தது. ஆகவே அவன் அடிக்கடி வீட்டிற்கு வந்து, நான் எதாவது கெட்டகனவு கண்டேனா என்று கேட்டபடி இருந்தான். யாராவது என் தொண்டையைப்பிடித்து அறுப்பது போல கனவு கண்டேனா? நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது பின்னால் யாரோ நின்று கொண்டு கத்தியால் குத்துவது போலக் கனவுகண்டேனா? என்றெல்லாம் கேட்டான். எனக்கு இந்த 'தெகிடுதத்தம்' ஏற்கனவே தெரியும்! ஆதலால் நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ள மகாசக்திவாய்ந்த "மாந்தரீக தாயத்து" ஒன்று வைத்துஇருப்பதாகவும், யாரேனும் எனக்குக் கெடுதல் செய்ய எண்ணினால், அவர்கள் செத்து விடுவார்களென்றும் கூறினேன்.

பட்டை நாமமும், சுகாதாரமும்.

இந்துக்கள், தங்கள் பழக்கவழக்கங்களைப்பற்றி விட்டுக் கொடுக்காது பேசுவார்கள். ஒரு பார்ப்பனர், ஒரு சமயம் என்னிடம் நெற்றியில் அணியும் "நாமம்" சுகாதார விதிக்காக

ஏற்பட்டதென வாதாடினார். உடம்பிலிருந்து வெளிவரும் "வியர்வை"யை அது தன்னிடம் இழுத்து உலர்ச் செய்கிறது என்றும் நெற்றி வியர்வை, ஒழுகி, கண்களில் விழாதபடி தடுக்கிறது என்றும் கூறினார்.

வேதகால வேதியர் மாமிசம் உண்டனர்.

மாமிசம் சாப்பிடுபவர்களை, பார்ப்பனர் கடுமையாகக்கண்டித்த போதிலும், அவர்களில் சில வகுப்பினர் மாமிசம் சாப்பிடுகின்றனர். மனுதர்ம சாஸ்திரத்திலே,பார்ப்பனர் சாப்பிடக் கூடிய மிருகம், பறவை, மீன்வகையாக்களின் ஜாப்தா சாப்பட்டிருக்கிறது.வடநாட்டுப் பார்ப்பனர் மாமிசம் சாப்பிடுகிறார்கள். தென்னாட்டு வைதீகப்பார்ப்பனர் அவர்களை ஒதுக்கித்தள்ளி விடுகின்றனர். வேத காலத்தில் பார்ப்பனர் எல்லா வகையான மாமிசமும் சாப்பிட்டனர். நாய்க்கறியைக்கூட தள்ளினதில்லை! பழய ஏடுகளைப் பார்த்தால், அவர்கள் மிருகங்களை சித்திரவதை செய்து கொன்றனர் என்பது தெரிய வரும். இதற்கு குயவர்கள் உதவியாக இருந்தனர். ஆடு, ஒரு அறைக்குள் கட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒருவன் அது நிமிரிக்கொண்டு ஓடாதிருக்க அதன கால்களைப்பலமாக அழுத்திப்பிடித்துக்கொள்வான். ஒருவன் அதனுடைய "விரையை" ப்பிடித்துப் பலமாக அழுத்த,அது சில நிமிடங்கள் பாடையால் துடி துடித்து,இறக்கும். அதன்வாயைத் திறந்து கொஞ்சம் உப்பை உள்ளேதிணிப்பார்கள். உடனே செத்தஆட்டை தொழுவத்திற்கு எடுத்துச் சென்று பார்ப்பனர், கத்திகொண்டும். கைகளாலும் அதன் தோலை உரித்து எடுப்பார்கள். பிறகு மாமிசத்தைத் துண்டித்து பானையில் தண்ணீருடன் வேக வைத்து, வேறு "மசாலா" எதுவுமின்றி, மாமிசத்தைப் புசிப்பர்.

ஜாதிக்கொடுமை

செருமார் எனப்படும் தாழ்ந்தவகுப்பினன், பார்ப்பன ஊர், குளம், கோயில் பக்கமே போகக்கூடாது. ஊருக்குள் அவன் வந்துவிட்டால் ஊருக்கே பிராயச்சித்தம் செய்தாக வேண்டும். காலில் சாணித்தண்ணீர் ஊற்றி, தலையில் பாலை ஊற்றி, தீட்டுப்பட்டவனுக்கு, தீட்டு போக்கப்படும். சிலசமயங்களில்அவன் "பஞ்ச கவ்யம்" (மாட்டு சாண மூத்திரம்) பருக வேண்டும்.

பார்ப்பனன் தீட்டாகாதிருக்கவேண்டி, செருமர்கள், பார்ப்பனருக்கு, 10 அல்லது 90 அடி தூரத்தில் ஒதுங்கி நின்று விட வேண்டும். ஜில்லாவிற்கு ஜில்லா இது வித்தியாசப்படும். புலையர்கள் 90 அடி தூரத்தில்தான் வரலாம்.

கோராகர்கள் எனப்பட்ட வகுப்பினர் சமீப காலத்திற்கு முன்பு வரையிலே, ஒரு பாண்டத்தைக் கயறு கொண்டு கழுத்தில் கட்டித் தொங்க விட்டுக்கொண்டு தான் வழி நடக்க வேண்டுமென்றிருந்தது. துப்பவேண்டுமானால், அந்தப்பாண்டத்திலே, துப்ப வேண்டும். எனெனில், தரையிலே துப்பி விட்டால், அவ்வழி வரும் பார்ப்பனருக்குத் தீட்டு ஏற்படும்! தட்டார், கச்சார், போன்றவர்கள் கூட பார்ப்பனருக்கு 5ரு அடி தூலைவில் நிற்க வேண்டும் என்பது அவர்களது ஐதீகம். தெற்கே சில இடங்களில், பாதையில் ஒரு இலை காணப்படும். அதன் மீது ஒரு கல் இருக்கும். அவ்வழியே போகிற பார்ப்பனனுக்கு, தாழ்ந்த வகுப்பினன், எவ்வளவு தூலைவு ஒதுங்கி இருக்க வேண்டுமோ, அவ்வண்ணமே இருக்கிறான் என்பதைக் காட்டும் குறியாகும் அது! சிலசமயங்களில் அவன் வயலில் இடுப்பளவு சேற்றில் நின்று கொண்டிருக்கக் காணலாம். இலையை அடையாளம் வைக்காத பட்சத்தில், தான் தூல வாக இருப்பதை உரத்த குரலாற்கூவித் தெரிவிப்பான்.

நானே, கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள கடையில், சிக செட் வாங்குவதுண்டு கடைக்கார பார்ப்பனப் பையன், சிக செடையும் மீதிப்பணத்தையும் ஒரு மரத்தட்டில் வைத்து ஒரு முழ நீளத்திலிருந்து கொண்டுதான், எனக்குத் தருவான்

தற்செயலாக ஒரு பார்ப்பனன், ஒரு தீண்டாதவன். இருக்குமிடத்தின் பக்கம் போகநேரிட்டு விட்டால் தனது "பூணூலை" மாற்றிக்கொண்டு, பஞ்ச கவ்பம் சாப்பிட்டு, பரி சுத்தமாக வேண்டும். கன்று போட்டவுடனே, அந்தப் பசுவைத் தீண்டி விட்டால், தீட்டு வந்து விடும்! அதைப் போக்கிக்கொள்ள உபவாசம் இருக்க வேண்டும்.

வகுப்பு மாறிய விந்தை

"செம்போட்டி என்றவகுப்பினர், தீண்டப்படாத வகுப்பினராக இருந்து, ஒரு ஆனந்தமான சம்பவங்காரணமாக தீண்டப்படும் வகுப்பினராக மாறினர். மலையாள நாட்டில் தாலிபாம்பா தேவாலயம் கட்டி முடிந்ததும், அதனைப்

டரிசுத்த படுத்த அபாமானபணச் செலவு ஏற்பட்டது. ஆயிரம் பார்ப்பனர் இதற்காக அமர்த்தப் பட்டனர். சடங்குகள் முடியும் தருவாயில் இருக்கும்போது, பூரீ கோவிலில் செப்பனிட்டு விட்டு, அப்போதுதான், ஒரு செம்போட்டி, வாக்கு கண்டனர். பார்ப்பனர் திடுக்கிட்டனர். முதலிலிருந்துபிராயச்சித்தச் சடங்கை திருப்டச்செய்யவேண்டும்; சடங்கின் செலவோ அபாரம். ஆனால் அவர்களுக்கு ஒரு உருவம் காட்சி தந்து அபயமளித்தது. அன்று முதல் சமுதாயத் துறையிலே செம்போட்டிகளின் நிலைமை உயர்ந்தது. அவர்கள் இப்போது தீண்டக்கூடாதவர்களல்ல!

பார்ப்பனத்திக்கும்'சூத்திர'னுக்கும் பிறந்தோர் சண்டாளவகுப்பினர் எனப்படுவார். அவர்கள் தான் எல்லா ஜாதிகளுக்கும் கீழானவர்கள். ஆனால் சூத்திரப் பெண்ணுக்கும், பார்ப்பனனுக்கும் பிறந்தால், அந்தவகுப்புகீழ் ஜாதிகள் ஜாப்தாவில், முதல் இடம்பெறும்! பார்ப்பனர் உயர்வின் போக்கு அப்படியிருந்தது.

கொள்ளைக் கூட்டம்.

"கீழ் ஜாதி" மக்களைப் பார்ப்பனன், கேவலமாக மதித்தது தோடன்றி அவர்களைக் கொள்ளையும் அடித்துமன்றோ வந்தான். கலியாணம், சாவு, பிரசவம், எது நேரிடினும் இந்தவகுப்பார், பார்ப்பனனுக்குப் பணந்தரவேண்டும். கீழ் ஜாதிக்காரன் ஏதேனும் பாபம் செய்துவிட்டால், அது நீங்க, பார்ப்பனன் கூறுவது போல்பார்ப்பனருக்கு அன்னதானமளிக்க வேண்டும். தன் குடும்பம் பட்டினிடால் வாடிபபோதிலும் பார்ப்பன உத்சவாதிகளுக்கு இவன் பணந்தர வேண்டும்.

சுயநலத்திற்காகப் பல்லைக்காட்டுவர்.

சமஸ்தான உத்தியோகங்களையோ, சர்க்கார் உத்தியோகங்களையோ பெற வேண்டுமானால், அதற்காக, பார்ப்பனர், பல்லைக்காட்டிக் கெஞ்சிப் பணிவதாக பாசாங்கு செய்வர். மகமதிய அரசர்களில் பலர், பார்ப்பனரை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். அப்போது தீட்டு ஒன்றும் ஏற்படுவதில்லை. தனக்கு உத்தியோகம் உயர்வோ, தன் உற்றார் உறவினருக்கு வேலைகள் கிடைக்கவோ, பார்ப்பனன், முகஸ்துதி செய்து மற்றையோரைக்கொண்டாடத் தயாராக இருப்பான். பணம் பறிக்கும் வழிமுறைகளைத் தயார் செய்வதிலே, வரி வசூலிக்கும் அதிகாரிக்கும் தெரியாத அளவு, பார்பனனுக்குத் தெரியும்.

பணவசூல், கணக்கு வேலைமுதலிய வேலைகளைப் பார்ப்பனன் செய்வான். சிறப்பாக குமாஸ்தா (கிளார்க்) வேலையிலே, அவர்கள் நிபுணர்கள். பார்ப்பனரை வேலைக்கு அமர்த்திக் கொண்டுள்ள ஐரோப்பியர், சர்வ ஜாக்ரதையாக இருக்க வேண்டும். ஏனெனில், பார்ப்பனன் எந்தக் குற்றத்தைச் செய்திருந்தபோதிலும், மற்ற வகுப்பினர் அந்தக் குற்றத்தை வெளியே சொல்லத் துணியவே மாட்டார்கள். ஆங்கிலக் கல்வி கற்று, பெரிய உத்தியோகங்களிலே யுள்ள பார்ப்பனர் தங்கள் ஜாதி ஆசாரத்திலும், வழுவியவர்களாகவே, மேலுக்குக் காணப்படுவார்கள். அந்தரங்கத்திலே அவர்கள் பார்ப்பனராகவே இருப்பார்கள்.

கோழைகள்.

வியாபாரம், பார்ப்பனருக்கு அவ்வளவாக பிடிப்பதில்லை. அது சற்று மட்டமான தொழிலாகக் கருதுவார்கள். ஆகவே எதேனும் ஒரு வேலையைத்தான் தேடுவார்கள். ராணுவத்திற்கும் அவர்கள் வேலைக்குச் செல்வதுண்டு. ஆனால் தைரியம் அவர்களுக்குக் கிடையாது. ஆகவே, கோழை மனப்பான்மை கொண்ட அவர்கள், போர்த்தொழிலுக்கு லாயக்குள்ளவர்களல்ல. யுத்தத்தில், அவர்கள் "ஓற்றர்" வேலைக்கு மிகத் தகுதியானவர்கள். தங்களுக்கு ஒருவாக்குத் தத்தம் செய்து விட்டு யாராவது எமாற்றி விட்டால், அவன் அடுத்த ஜென்மத்தில் கழுதையாகப் பிறந்து பிணத்தைப்பிடுங்கித் தின்பான், என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அந்தக்கால தர்பார்.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு, பார்ப்பனருக்கு வரியே கிடையாது! சுதேச சமஸ்தானங்களில் அவர்கள் எந்தக் குற்றத்தை வேண்டுமானாலும் செய்யலாம். சாதாரண தண்டனை உண்டே தவிர, தூக்குத்தண்டனை என்பது அவர்களுக்குக் கிடையாது. ஆரிய மன்னர்கள், பார்ப்பனருக்குத் தூக்குத்தண்டனை தாமாட்டார்கள்.

கும்பகோணை சம்பவம்.

பார்ப்பனத்தி, கோர்ட்டில் சாட்சியம் கொடுக்க வலாமா, என்ற பிரச்சினை, சமீபத்தில், கும்பகோண சம்பவமொன்றில் கிளம்பிற்று. கதிர்வேலு படையாட்சி என்ற பெருங்கொள்

ளைக்காரன் ஒரு வீட்டில் புகுந்து 10,000 ரூபாய் பெரு மானமுள்ள சாமானைக் கொள்ளை அடித்தான். பிறகு அவன் சுட்டுக் கொல்லப்பட்டான். கொள்ளை அடிக்கப்பட்ட வீடு ஒரு பார்ப்பன விதவையுடையது. புருஷன் இறந்து ஒரு வருஷம் ஆவதற்குள், தான்வெளியே வரக்கூடாதெனவும், ஆகவே கோர்ட்டில் சாட்சி கூற முடியாதென்றும், அவள்கூறி விட்டாள். பரோங்கக் கோர்ட்டுக்கு வராவிட்ட போதிலும், மாஜிஸ்டி ரேட்டின் அறைக்கு வந்துசாட்சி கூறும்படி சொல்லப்பட்டது. அதையும் பலிக்கவில்லை. கடைசியில், மாஜிஸ்டிரேட், அவள் வீட் டிற்குச் சென்று சாட்சியம் விசாரித்து வந்தார்.

ஜாதிக்கொடுமை-கோர சம்பவம்

1932ம் ஆண்டு, தஞ்சாவூர்ஜில்லாவிலுள்ள பட்டுக்கோட் டையில் நடந்த ஒரு சம்பவம் ஜாதி ஆணவத்தால் நேரிட்ட கோரத்தை விளக்கிற்று. பெருமழை! ஆகவே தாலூகா ஆபீஸ் முற்றத்தில் அனேகர் ஒதுங்கி நின்றனர். அதிலே மூன்று பேர், ஆதிதிராவிடர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. தீட்டுப் பட்டு விடுவென்று உயர்ஜாதிக்காரர், அந்த ஆதிதிராவிடரை முற்றத்தை விட்டு விலக்கி, ஒரு புளிய மரத்தடியில் தங்கும் படி விரட்டி விட்டனர். மரத்தடியில் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, மரத்தின் மீது இடி விழுந்தது. ஒருவன் அங்கேயே மாண்டான். இருவருக்குக் காயம். அவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

பார்ப்பனத்திமிர்-மற்றொரு சம்பவம்.

1932ல் அலகாபாத்தில் பார்ப்பன அட்டூழியம் ஒன்றுவெளி ப்படுத்தப்பட்டது. ஒரு பார்ப்பனன், வண்ணாத்தி வீட்டிற்குச் சென்று அழுக்குத் துணிகளை எடுத்துக்கொண்டு போகும்படி, அவளை அழைத்தான். வீட்டில் வேலைஇருப்பதால், அன்று மாலை வந்து அழுக்கு எடுத்து கொண்டு போவதாக அவள் கூற, பார்ப்பனன் அவளை உதைத்தான். அவள் கூக்குர லைக் கேட்டு, வேறு இருபெண்கள் அங்கு ஓடிவந்து அவனைத் தடுத்தனர். அவர்களுக்கும் உதை விழுந்தது. ஒருத்திக்கு அடிவயற்றில் உதை பலமாகவிழவே, அவள் இறந்து விட் டாள். இதற்காக வழக்குத் தொடரப்பட்டு, பார்ப்பனன் தண்டி க்கப்பட்டான். ஆனால் அவன்மேல் கோர்ட்டுக்கு மனுச் செய்துகொண்டான். அவனுடைய திமிரைக் கண்டு வெகு

ண்ட அலகாபாத் கோர்ட் ஜட்ஜ் "ரஷ்யஜார்" அல்ல என் பதை அவன் உணரட்டும் என்று அவனுக்குத்தக்க பாடம் வரும் படி, சரியான தண்டனை அளித்தார்.

தங்கள் கொடுமையை மறைக்க, பார்ப்பனர் ஒரு சாக்குச் சொல்வதுண்டு. தீண்டாதார், பாட்டு மாமிசம் புசிப்பதால், அவர்களை உயர் ஜாதியில் சேர்க்க முடியாதென்று கூறுகிறார் கள். பார்ப்பனரைப்போல், ஏதோ ஒரு கோமான மதச் சடங்கென்ற சாக்கைக் கூறிக்கொண்டு இரகசியத்தில் உண் ணாது, எழைத்தீண்டாதான் பகிரங்கமாக, மாட்டு இறைச்சி யைத் தின்கிறான்.

எம். கே. ஆச்சாரியின் ஆபாசக்களஞ்சியம்.

ஒரு எம். சே: ஆச்சாரி என்பவரால், எழுதப்பட்டஒரு கட் டுரை, தென்னிந்தியா பத்திரிகை யொன்றிலே வெளிவந்தது அந்த ஆபாசக்களஞ்சியத்தில் சில பகுதியைக் கீழே தருகிறேன். அரை குறை வைத்தியர்கள், போக்கிரிகள், தீண்டாமை போ கும் வழிகளைக் கூறுகிறார்கள். என்று, அந்தப் போர்வழி கண் டிக்கிறார். "டாக்டர் மூன்ஜேயைப் போன்றவர்களுக்கு நான் இந்த உண்மையை உணர்த்துகிறேன். பசுக்களை, தலை முறை தலை முறையாகக் கொன்று தின்று பாபக்கிருத்யம் செய்தவர்கள் இந்த தீண்டாதார். மற்றும் பல பாதகம் புரிந்தவர்கள். பசுமாட்டு மாமிசம் தின்பவரை, சமுதாயத்திலும் மதத்திலும் தீண்டாதானெனஒதுக்கிவைத்தது சனாதன தர்மத்திற்கு, அவமானம் தருவதல்ல, சனாதன தர் மத்தின் பெருமையாகுமது! பிறப்பினால் தீண்டாதானாகப் பிறந்தவன், தனது பாபக்கிருத்தியங்களை விட்டு, கட வுளை வழி பட்டால் சாதுவாகலாமென, அதே சனாதன தர் மம் கூறுகிறது. அதன் பெருமையே பெருமை! ஆகவேதான் தீண்டாதானாகப் பிறந்தும், பக்தர்களான, சிலரின் உருவங்கள் இன்றும் இந்து கோயில்களில் வழிபடப் படுகின்றன. தீண்டாமையைப் போக்க சரியானவழி, தர்ம மார்க்கமேயா கும். காந்திய முறை, பைசாசத்தனமானது. அது, ஆதிதிரா விடரை பக்தர்களாக்கும் வழியல்ல. ஆனால் ஏதோ உயர் ஜாதிக்காரர் ஆதிக்கம் செலுத்துவதாகவும், அதனை ஒழிக்க, ஆதிதிராவிடருக்கு ஆலயப் பிரவேசம் அளிக்கப்பட வேண்டு மெனவும் கூறப் படுகிறது. மாடு தின்பது இந்து மத தர்மப்படி பாபமாகாது என டாக்டர் மூன்ஜே

போன்றவர்கள் தீர்மானித்தாலொழிய முதலிலே அவர்கள் பாபக்கிருத்தியங்களை விட்டொழிக்கும்படி தீண்டாதாருக்கு உபதேசஞ் செய்ப வேண்டும். அப்படி ஏராளமான தீண்டதார், பரிசுத்தமாகி, பக்தி மார்க்கத்திற்கு வந்தால், கோயிற் கதவுகளைத் தாராளமாகத் திறந்துவிட, வைதீக இந்துக்கள் தயாராக இருக்கிறார்கள். "அரசியலிலே நீங்கள் உங்கள் இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள். மத விஷயங்களிலே பிரவேசிக்கவேண்டாம்" என்பதுதான், வைதீகர்கள், சீர்திருத்தக்காரர்களுக்கு செய்து கொள்ளும் பிரார்த்தனை. இந்து மதத்தைக் குலைத்து, அதன் தர்மத்தை நாசமாக்குவதை விட்டர்மீக இந்துக்களையே அழித்துவிட்டுமே. மதமழியும்கொடுமையைவிட இது குறைந்தகொடுமையேயாகும். ஆனால் அப்படிப்பட்ட அவதி ஒன்றும் ஏற்படுமென்ற பயம் எங்களுக்கு இல்லை. சத்தியம் ஜெயிக்கும்என்பதிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு. இந்தியாவின் ஆத்மீகம், இந்துமதம், உலகையே வெல்லும் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு" என்றெல்லாம் அந்த எம். கே. ஆச்சாரி எழுதியிருக்கிறார்.

இதைப்போன்ற கட்டுரைகளைப் படித்துப் பார்த்தால், இந்திய ஆசாங்கம் பார்ப்பனர் கைக்குச் சென்றால் என்ன நடக்கும் என்பது விளக்கமாகத்தெரிந்து விடும். கேட்டீர்களா கதையை! இந்திய ஆத்மீகத்தால், இந்து மத தத்துவத்தால் உலகம் ஜெயிக்கப்படுமாம்!

இந்து மதக் கொடுமை ஒழிய வேண்டும்.

அரசியலை மட்டும் கவனித்துக்கொள்ளுங்கள். மதத்தைத் தொட வேண்டாம், என்கிறாரே, இவருக்குத் தன் நாட்டின் நிலை தெரியவில்லை என எண்ணுகிறேன். சரித்திரம் இல்லாதது இந்தியா. கி மு. 500ல், டாரயஸ் பஞ்சாபில் பிரவேசித்ததும், வடநாட்டில் சில காலம்கிரேக்க ஆதிக்கத்தை அலெக்சாண்டர் ஏற்படுத்தியும் பிரமாதமான பலனைத் தரவில்லை. சந்திரகுப்த பாம்பரையின் ஆட்சியிலிருந்துதான், சரித்திரமென்று போக்கியதைக்கு லாடக்கான விஷயங்கள் இந்தியாவிலே நடந்தன. விக்ரக வணக்கம், மூடப்பழக்க வழக்கங்களே சரித்திரமாக இருந்துவந்தது

இன்று நிலவிவரும், மூடப்பழக்கவழக்கங்கள் ஒழிந்தால்தான், அரசியலின் முலம் ஏதேனும் முன்னேற்றம் அடையமுடியும்.

நாகரீக இலட்சியங்களைப் பாழாக்கிக்கொண்டு, கோடிக்கணக்கான மக்களின் உடலையும் மனதையும் விஷமூட்டிப்

திராவிடரும்-ஆரியரும்.

(தோழர். பி. சிதம்பரம்.)

அத்தியாயம் 1.

ஆரியர்கள்.

காலாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா புகுந்த ஆரியர்கள் வெறும் காட்டுமிராண்டிகள். "சரித்திர ஆரம்ப காலத்திலே ஆரியர்கள், வேட்டையாடி மிருகங்களை வதைத்துக்கொன்று தின்று வந்தவர்கள். தங்க குடிசையும் அவர்களுக்குக்கிடையாது. உணவிற்காக, காட்டு மிருகங்களை வேட்டையாடவோ, அல்லது அவர்களுக்கு இயற்கையாக ஏற்படும் ஆபத்துகளினின்றும் தம்மைப்பாதுகாத்துக்கொள்ளவோ, அவர்கள், கூட்டங்கூட்டமாக வசிக்கலாயினர். நாளாகவாக, அவர்கள், ஆடுமாடுகளை மேய்த்துத்திரியும் தொழிலில் ஈடுபட்டனர். பசும்புற்றரைகளே அவர்கள்சாஜ்டம்! ஆடுமாடுகளே அவர்கள் பொக்கிஷம்! விளைவிலேஅவர்கள் அமைதியான சுபாவம் பெற்று, கொடுஞ்செயல் புரியாது, சாந்தமான முறையிலே வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தனர். குடும்பங்களாக வசிக்கவும் ஆரம்பித்தனர். பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வகுப்புகள் ஏற்படலாயின என, இந்தோ-ஆரியர்கள்" என்ற தமது நூலிலே ஆசிரியர் சாமச்சந்திர கோஷா கூறுகிறார்.

இப்படியும் ஒரு ஜாதியினர் இருக்க முடியுமா? இவர்கள்தானா ஆரியர்கள்! என்று இன்றைய இந்தியர்களில் பெரும்பான்மையினர் ஆச்சரியப்படக்கூடும். ஆனால், இப்போதுங்

வாழாக்கி, நாட்டில் சர்ப்பமெனநகர்ந்து கொண்டிருக்கும் இந்த மதக் கொடுமை உள்ளவரையில், இந்தியா ஒரு அடிகூட முன்னே முடியாது.

கூட, அத்தகைய ஜாதிகள், இந்தியாவில் பல பாகங்களிலும் சிதறுண்டு கிடப்பதையும், அந்தஆதிகால வாழ்க்கையை ஏய நடத்திவருவதையுங் காணலாம். அவர்கள் தான் மலை ஜாதியினர்.

'திருவாங்கூர் சுதேசிகள்வாழ்க்கை' என்ற புத்தகத்தில் ஆசிரியர் ரெவரண்டு சேமுவேல் மேட்டூர் என்பார், "தானாகவிளைந்ததைக்கொண்டோ, சமயா சமயத்தில் உழுதுண்டோ, வேட்டையாடியோ, ஜீவனத்தை நடத்துவது கஷ்டமாக இருக்குங் காரணத்தால், பல மூட்டு ஜாதியார்கள், மலை உச்சியில் குடியேறி வசிக்கிறார்கள். அவர்கள் யாருக்கும் கெடுதிசெய்வதில்லை. பஞ்சகாலத்திலே உணவைத்தேடிக்கொண்டு அலைவார்கள். (யாம்) கிழங்குகள் கிடைத்தால், வேகவைத்துத் தின்பார்கள். அவர்கள் பெருந்திண்டிப்பிரியர்கள். கிடைப்பதத்தனையும் தின்றுவிடுவார்கள், பிறகு வகையின்றி பல நாட்கள் வதைவார்கள். பெண்கள் தூராச்சாரம் கொண்டவர்கள். நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வதில்லை. குழந்தைகள் மரணம் அதிகம்' என இத்தகைய மலை ஜாதியினரின் வாழ்க்கையைப்பற்றிக்குறிப்பிட்டுள்ளார்.

இன்று பட்டாணியர்களும், பலுஜிஸ்தான் வாசிகளும், தங்கள் நாட்டைத்துறந்து, பஞ்சத்தாலோ பிணியாலோ அடிபட்டு நம் நாட்டிலே திரிகிறார்களே, இதைப்போலவே எந்த நாட்டிலிருந்தோ (எந்த நாடென்பது இன்னமும் தெரியவில்லை) நமது நாட்டிற்கு வந்த ஆரியர்கள் எப்படி இருந்தார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், இப்பொழுதுள்ள மலை ஜாதியாரைப்பற்றிக்கொஞ்சம் தெரிந்திருக்கவேண்டும்.

இன்று,சென்னைமீது' எதாவதொருமலை ஜாதி படைஎடுத்துவருமானால், அந்த நகரம் என்ன ஆகும் என்பதை நினைத்துப்பார்த்தால் விளங்கும். ஆனால் பண்டிதர்கள்,' ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது, தாஸ்யூஸ் என்ற ஆதி குடிகளுடன் சண்டை செய்யவேண்டி வந்ததெனவும், இந்த தாஸ்யூஸ்எனும் ஆதி குடிசள், மிகமிகக் கேவலமான காட்டு மிராண்டிகள் என வும் கூறியுள்ளார்கள். தாஸ்யூஸ் எனும் ஆதி குடிகளைப்பற்றி, சமஸ்கிருத பாஷையினால்தான் சரிவர வர்ணிக்க முடியும்! தங்களுடைய பூர்வீக பிரதேசத்தை விட்டுப் பிரிந்து, ஆரியர்கள் இந்தியா வந்தபோது, இந்தியாவின் ஆதி குடிகளாகிய தாஸ்யூஸைக் கண்டனர். இந்த ஆதி குடிகள் துரோணிய வம்சத்தினர். ஆகவே உருவம், நிறம். மொழி, நடை, உடை பாவனைகளில், ஆரியர்களைப்போலன்றி வேறுபட்டுக்காணப்பட்டனர். ஆகவே, இந்த

இருசாதியினரும் கலந்துவாழ்வதென்பது மூடியாது போயிற்று. இருசாராருக்கும அடிக்கடி கடும்போர் மூண்டு வந்தது. ஆதி குடிகள் மிருகங்கள் போன்றிருந்தனர்.(?) ஆரியரோ வென்றால், கம்பீரமான தோற்றம், வசீகரமான நிறம், நாகரீகமடைந்தவர் கள். ஆகவே ஆதி குடிகளை, ஆரியர்கள் கேவலமாக மதித்த னர். வேதத்திலே, பல சந்தர்ப்பங்களில், ஆதி குடிகளை "தாஸ் யூஸ்" என குறிப்பிடப்பட்டிருக்கிறது. "த்வசம் கிருஷ்ணம்"- அதாவது, கருப்பர்கள், என்றுவெறுப்புடன், ஆதி குடிகளை, ஆரியர்கள் அழைக்கலாயினர்.

ஆரியர்கள் இந்தியாவில்கண்டதாஸ்யூஸ்-அல்லது திராவிடர் என்ற ஏதோர ஒரு பெயருடைய அந்த ஆதி குடிகள், அவ்வளவு வெறுக்கத்தக்கவராகவே இருந்திருக்கவேண்டும்.(?)

சுதந்திரத்தையும், நிலத்தையும்யாரிடமிருந்து கொள்ளைகொ ண்டார்களோ அதே ஆதி குடிகளை, ஆரியர்கள், எவ்வளவு வெறுத்தார்கள், கேவலப்படுத்தினார்கள் என்பதை மிகைபடக் கூறமுடியாது ஜாதித்துவேஷம் நீக்கமுடியாத விளக்கமுடியாத மானிட இயல்பு. இதன் காரணமாக, ஆரிய நூற்களிலே, பல இடங்களில்,ஜாதித்துவேஷம் கக்கப்பட்டிருக்கிறது.எனினும் இவை களைத் தொகுத்துப்படித்தால், வெற்றியடைந்த ஆரியர்களுக் கும் ஆதிகுடிகளுக்கும் அந்தக்காலத்தில் இருந்த காதம்மியம் புலனாகும்." என, "வேதகால இந்தியா" என்ற புத்தகமெழு திய ராகோஜின் அம்மையார் கூறியுள்ளார்கள்.

ஆரியப் பார்ப்பனர்களால் தேவர்கள் தந்த பரிசு எனக் கொண்டாடப்படும் ராமாயணத்திலே, ஆதிகுடிகளின் உண்மை நிலை விளக்கப்பட்டுள்ளதை பிறகு காண்போம்.

"மட்டமான நாகரீகத்தினருடைய பிரதேசத்திலே உயர் தர மான நாகரீக மக்கள் பிரவேசிக்க ஆரம்பித்த காரணமாக சமுதாயத்திலே வித்தியாசங்களும் பேதங்களும் ஏற்பட்டு, வளர்ந்து, ஜாதிப்பாகுபாடாக மாறிற்று. யாக ஹோமங்களை விளக்கும் ரிக் வேதத்தைப் பரிசீலனை செய்கையில், ஆரியர்கள் பொருளாதாரத்திலும், புத்தி கூர்மையிலும், மிக முன்னேற்ற மடைந்தவர்கள் என்பது தெரிகிறது. ஆதிகால பெர்ஷியர்கள், போல ஆரியர்களுடைய மொழி மதம் சமுதாய ஸ்தாபனங்கள், யாவும் "இந்தோ ஐரோப்பிய" சம்பிரதாயத்தை ஒட்டியதே

யாகும். கலையில் அவர்கள் வல்லவர்கள். உலோகத் தொழில் போன்றவைகளில் தேர்ச்சிபெற்றவர்" என சற்று நிதானத்துடன்யோசிக்கும் ஆசிரியராகிய புராபசர்ராப்சன் கூட,தமது "புராதன இந்தியா" என்ற புத்தகத்திலே எழுதியுள்ளார்.

ஆசிரியர் ரிவாஸ் 'எந்த ஜாதியாரின் நாகரீகம் உயர்ந்ததாக இருக்கிறதோ அவர்கள் கீழ்த்தரநாகரீக மக்களைத் தம் வசப்படுத்துவர்" எனக் கூறியுள்ளார். புராபசர்ராப்சனின் அபிப்பிராயப்படி, ஆதி குடிகளைவிட ஆரியர்களே, உயர்தரமான நாகரீகம் படைத்தவர்கள்.

அத்தியாயம் 2.

வெள்ளைக்காரரின் ஆரிய மோகம்.

இங்கிலாந்து, ஜெர்மனிமுதலிய தேசத்து, கீழ்நாட்டுக் கலை நிபுணர்களுக்கு, சில காலத்திற்குமுன்பு, ஆரிய மோகம் எற்பட்டது. ஆரிய சம்பந்தமுள்ளதையெல்லாம் அவர்கள் புகழ ஆரம்பித்தனர். வெள்ளை நிறங்கொண்ட ஐரோப்பியரும். ஆரிய வழிவந்த பார்ப்பனரும் பந்துக்கள் என்ற ஒரு எண்ணம் பரவியதே இந்த மோகத்திற்குக் காரணம்.

யூதர்களை விரட்டவேண்டி இப்போது,ஹிட்லர், ஜெர்மனியிலே, ஆரியஜாதி தத்துவத்தைப்புகுத்துவது இதுசமயம் கவனத்திற்கு வருகிறது.

சமீப காலம் வரையிலே இந்த மோகத்திற்கு அளவேகிடையாது. இந்திய ஆரியரின்மொழி, கலை ரத்தத்தின் சிலாக்கியம், மதம் எதை எடுத்துக் கொண்டாலும், புகழ்மாலை சூட்டிய வண்ணமே இருந்தனர், கீழ்நாட்டுக் கலை, நிபுணர்கள். அவர்களுடைய கற்பனைக்கு எல்லையுமில்லை, கட்டுமில்லை!

இந்த மோகம் சற்று குறைந்து, சிறிதளவு எதிர்ப்பும், சந்தேகமும் எழ ஆரம்பித்தபிறகு 1942-ல் எழுதப்பட்ட கேம்பிரிட்ஜ் இந்துதேச சரித்திர புத்தகத்திலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறேன்.

"பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையிலே, கிரீஸ், ரோம், முதலிய புராதன நாடுகளிலுள்ளதைப் போன்ற, காப்பிடங்கள்,இந்தியாவில்இருந்தன என்பதும், மேனாட்டினருக்குத்

தெரியாமலிருந்தது. நீதிமன்றங்களுக்காக, சட்டபுத்தகம் தயாரிக்கவேண்டி, கவர்னர்ஜெனரல்,பண்டிதர்களை அழைத்து, சமஸ்கிருத சட்ட புத்தகங்களைப் படித்து, ஒரு கலம்பகம் தயாரிக்கச் சொன்னார். ஆனால் அப்படித் தயாரிக்கப்பட்ட புத்தகத்தை, ஆங்கிலத்திலே மொழிபெயர்க்க ஒருவாலும் முடியவில்லை. ஆகவே அதை முதலில் பெர்ஷியன் மொழியில் மொழிபெயர்த்து,பிறகு 1776ல் ஹால்டேன், அதை இங்கிலீஷில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.கருத்து சிறிதும் மாறவில்லை. சமஸ்கிருதம், காரியத்திற்கு உகந்ததாக இருந்தது, அதற்குப் பிறகு கிழக்கிந்தியக்கம்பெனி புராதன பாஷை, அதனை உள்ளடக்கிய காப்பியங்கள் இவைகளை மக்கள் பயில வைக்கும் திருப்பணியைக் குறைவின்றி செய்ய ஆரம்பித்தது" சமஸ்கிருதமும், ஆரியமும், சர்க்காரின் அன்பான ஆதரவைப் பெற்றன.

ஆகவே 1786ம் ஆண்டுமுதல் பிரிட்டிஷ் அதிகாரத்தைவாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவிலே ஸ்தாபித்துக் கொண்டிருக்கையில், இந்தியாவின் உயர் நீதி மன்றத்தின் அதிபதியாக சர் வில்லியம் ஜோன்ஸ் இருந்து வந்தபோதும் 1922-ம் ஆண்டுவரை, சுமார் 150 வருஷங்கள், பார்ப்பனரும்,வெள்ளையரும் மொழியினாலே மட்டுமன்றி, இரத்த சம்பந்தமுடைய ஒரு குல மக்கள் என்ற எண்ணம் நிலவி நின்றது. ஆரியன் என்றால் வெள்ளைக்காரனிடம் உறவு கொண்டாடும் பாத்யதை உண்டு. திராவிடன் என்றால், அது முடியாது. அவன் சற்று மட்டமான ஸ்தானத்திலேதான் இருக்கமுடியும் என்ற ஆதாரமற்ற எண்ணம் இருந்து வந்தது. இதன் காரணமாக சரித்திரிகாசிரியர்களும், சமஸ்கிருதம் பயின்ற பார்ப்பன வெள்ளைக்கார பண்டிதர்களும், தாஸ்யூஸ் எனும் இந்திய ஆதி குடிகளுக்கு, கேவலமான ஸ்தானத்தை வழங்கி வந்தனர்

அத்தியாயம் 3.

எதிர்ப்புகள்.

"பார்ப்பனன்-வெள்ளையன் பாத்யதை" என்ற இந்த ஆபாசக்கொள்கையை ஒரு சில சரித்திரி காசிரியர்கள் எதிர்த்தனர். சந்தேகித்தனர். சிலர் பலமாகமீவ, இதனைக்கண்டித்தனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு புத்தமதத்தைப்பற்றிய நிபுணரான டாக்டர் ரிஸ்டேவிஸ், என்பவர் ஐரோப்பியர்கள் இந்தியாவந்தபோது நீண்ட காலமாக, பார்ப்பனீயக் கொள்கை - பாலி

ஊரிப்போன காரணத்தால், பார்ப்பனரல்லாதார் விஷயமாகப் பேசுவதென்றாலே போக்கிரித் தனம் என்று கருதப்பட்டு வந்ததெனவும், இதனைப்பற்றிப்பேச முயற்சிப்பதே பாபமாகக் கருதப்பட்டதெனவும் கூறினார். மிக மிக உண்மையான்தே, ஆசிரியர் கூறுவது.

இந்து தேச சரித்திரத்தின் புராதனகாலத்து விஷயத்தையே கெடுத்த விஷம் எது என்றால், ஆரியர்கள், இந்தியாவில் மெல்ல மெல்ல புக ஆரம்பித்த காலத்தில், ஆதி குடிகளாக இருந்த வானைவரும். காட்டு மிராண்டிகள் என்ற கருத்தை வளர விட்டதேயாகும். சிலர் காட்டுமிராண்டிகளே. காடுகளிலே வேட்டையாடும் ஜாதியினர் இருந்தனர். தொம்பாவர் போன்ற நாடோடிகள் இருந்தனர். மலை ஜாதியினருமுண்டு. ஆனால், சமுதாயத்துறையில் முன்னேற்றமடைந்து, செல்வ நிலையில் உயர்ந்து நாகரீகமான வாழ்க்கையை நடத்திவந்த வகுப்பினர் வாளமாக இருந்தனர். மிக மிக சாந்தமும் சமாதானமுமான வாழ்க்கையை பன்னெடும்நாட்களாகப் பழகிக்கொண்ட காரணத்தினாலேயே, சண்டை வந்தால் நீண்டநாட்கள் அதில் ஈடுபடஇயலாதவர்களாகப் போனது முண்டு. இந்தியாமீதுபடைஎடுத்துவந்தவர்களும் மயங்கும்படியான செல்வ வாழ்க்கையில் அவர்கள் இருந்துவந்தனர். போர் ஏழாதபடிபல வகுப்பினர் கடுத்துவிட்டனர். போரில் வென்றவனைக்கூட ஆட்கொண்டு, தங்களுடைய பூர்வீக சுதந்திரத்தை ஓரளவு காப்பாற்றிக் கொண்டதுடன், ஆரியருக்கு, தமது கருத்துகளையும், தத்துவங்களையும், போதித்தும் புகுத்தினர் என்பதாக, ஆசிரியர் ரிஸ்டேவிஸ் கூறுகிறார்.

"அதேசமயத்திலே, நாகோசின் அம்மையாரும், பார்ப்பனீயத்திடமும் ஆரியரிடமும்காட்டப்பட்ட மோகத்தைக்கண்டித்து, தமது, "வேதகால இந்தியா" வில் எழுதியுள்ளார்.

"ஒரு தேசத்திலிருந்தவர் அனைவரும் காட்டுமிராண்டிகள் என் எண்ணுவது மிகத்தவறு. அது சரியான சரித்திர ஆராய்ச்சியையும் கெடுக்கக்கூடிய தவறு. ஒரு காலத்தில் சர்வ சாதாரணமாக இது நம்பப்பட்டு வந்தது. ரிக் வேதத்தை சரியானபடி ஆராய்ச்சி செய்யாததால் வந்த வினையாக இது இருக்கலாம். சமீப காலத்திற்கு முன்பே, ஆராய்ச்சி செம்யப்படத் தொடங்கப்பட்டதால், சரியானதகவல்கள் கிடைக்காமற்போன குறையினாலும் இக்கோளாறு ஏற்பட்டிருக்கலாம். ஏதோ ஒரு கொள்கையில் ஆர்வம் உண்டான காரணத்தால், அதை அப்படி

யே நம்பி சிந்தனா சக்தியையும் இழந்துவிட்டதால் வந்தவம்பாக இருக்கலாம்.'' என அம்மையார் கூறியுள்ளார்.

''இந்தப் புராதன ஏடுகளை அப்படியே நம்பி, நவீன கலை வாணவர்கள் பாஷ்பங்கள் செய்யலாபினர். உள்நாட்டு நடப்பு சரித்திர பூர்வமான தகவல்கள் ஆகியவைகளைச் சரிவரக் கவனியாது, கீழ்நாட்டுக் கலை மோகத்தின் காரணமாக அந்த ஏடுகளுக்கு புது பாஷ்யம் கொடுத்தது மிகத்தர்பாக்கியமே யாகும்.

'பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே தான் நவீன விஞ்ஞான ஆராய்ச்சி மனோபாவம் வளர ஆரம்பித்தது. இதே சமயத்தில்தான், இந்தியாவின் புராதன சரித்திர ஆராய்ச்சி மனோபாவம், கல்வித்துறையையே மாற்றி அமைத்தது. புராதன கிரேக்கர், ரோமர்களுடைய பெருங் காப்பியங்களைப் பயின்றமேனாட்டு ராஜதந்திரிகளும் பண்டிதர்களுமே, முதன் முதலாக, இந்தியாவின் புராதன மொழிகளைப்பயில ஆரம்பித்தனர். சமஸ்கிருத இலக்கணத்தைக் காண்போர் யாருக்கும், அம்மொழியின் சொல் நயம் முதலியயாவும், கிரீக், லத்தீன் முதலிய மொழிகளைப் போன்றதே யென்பது விளங்கும். அதைக்கண்டுதான், மேனாட்டுப்பண்டிதர்களும், சமஸ்கிருதத்தில் லயித்துப் போயினர். சமஸ்கிருதத்திற்கும் மேனாட்டுப் புராதன மொழிகளுக்கும் எப்படி இந்த ஒப்புவமை ஏற்பட்டது என்ற கேள்வி பிறந்தது. இதற்குச் சரியான பதிலை டாக்டர் ஜான்சனால் புகழப்பட்ட, சர். வில்லியம் ஜோன்ஸ், கூறியுள்ளார். ''சமஸ்கிருத மொழியின் புராதனம் எத்தகைமைத்தாக இருப்பினும், அது மிக அமைப்புபொருந்திய மொழியாக விளங்குகிறது. கிரேக்க மொழியைவிட வளர்ச்சி அடைந்தது. லத்தீன் மொழியைவிட சிறப்புவாய்ந்தது. இருமொழிகளைக் காட்டிலும், நாகூக்கானது. இலக்கண இயல்பு, வினைச்சொற்கள் ஆகியவற்றைக்கவனித்தால், இந்த இருமொழிகளுடனும் பலத்த பந்தத்துவம் உடையது. இந்த பந்தத்துவம், தற்செயலாக ஏற்பட்டிருக்கமுடியாது. இதனை, ஆராயும், எந்த மொழி ஆராய்ச்சிக்காரரும், இவையாவும் இன்று அழிந்துபோன ஒரே தாய் மொழியினின்றும் இவைகள் பிறந்தன என்ற முடிவிற்கு வாராதிருக்க முடியாது. இந்தியாவின் ''தேவ பாஷை'', யான சமஸ்கிருதம், பெர்ஷியன், ஜெர்மன், கிரேக்கமொழி, ரோம்மொழி, கெல்ட், ஸ்லாவ்மொழி, ஆகியவைகளெல்லாம், ஒன்றோடொன்று சம்பந்தமுடையன என்பதை சர். வில்லியம் ஜோன்ஸ் 1786ல் கண்டு பிடித்துக் கூறினார்.

சுருங்கக்கூற வேண்டுமானால் இந்தியாவில் வசிக்கும் பார்ப்பனனுக்கும், வெள்ளைக்காரனுக்கும், பந்தத்துவம் உண்டு என்று ஆராய்ச்சி மூலம் முடிவு செய்யப்பட்டது. இந்த பந்தத்துவம் மொழி காரணமாகமட்டுமல்ல! சமஸ்கிருதம், பார்ப்டனீயகலைகளின் மொழியாக இருந்ததுடன், ஐரோப்பிய பண்டிதர்களுக்குஎப்படி, லத்தீன் மொழி இருந்துவந்ததோ அதைப்போல இந்தியாவின் எல்லாப்பாகங்களிலும், படித்தவர்கள் பேசும் மொழியாகவும் சமஸ்கிருதமே இருந்துவந்தது.

இப்படி கற்பிக்கப்பட்ட,பார்ப்பன-வெள்ளைக்கார பந்தத்துவம் மொழியோடுமட்டுமின்றி, இரத்தக்கலப்புக் காரணத்தோடும் கூறப்பட்டது.

மொழிகளைக் கொண்டு, பேசுவோரின் பந்தத்துவத்தைப் பரிசீலனை செய்வதென்பது மிக சிக்கலான விஷயம். ஏமாற்றத்தைக் கொடுத்து குழப்பத்தை உண்டாக்கக்கூடியது. உலகிலே பல பாகங்களிலே இன்று ஒரு மொழியை ஒருவர் பேசி வந்தால் அவரை அந்த மொழியை ஆதிகாலத்தில் பேசி வந்தவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்று சொல்லிவிட முடியாது. வெள்ளைக்காரனுக்கும், இந்திய பார்ப்பானுக்கும் உள்ளதாகச் சொல்லப்படும் பந்தத்துவ விஷயத்தைத் தவிர்த்து மற்றைய பந்தத்துவத் தகறாருகள் விளக்கப்பட்டு விட்டுள்ளன. சரித்திர ஆதாரமான சாட்சியமின்றி, மொழிமூலம் பந்தத்துவம் இருப்பதாகக் கூறுவது முடியாத காரியமென்பது விளங்குகிறது.

ஆனால் வெள்ளைக்காரனும், இந்திய பார்ப்பனனும் ஒரு குடும்பத்தினர் என்றதன்குட்டு வெளிப்பட தாமதமாகிவிட்டது. ஆனால் இந்த முறை கைவிட்டு விடப்படுவதற்குள், விஷமம் ஏராளமாக செய்யப்பட்டு விட்டது" என ஆசிரியர் ரிஸ்டேவிஸ் கூறுகிறார்.

1893-ம் ஆண்டிலேயே, இந்திய ஆதி குடிகளான தாஸ்யூஸ்களைப் பற்றிய எண்ணத்தை மாற்றிவிட வேண்டுமென ஆசிரியர் கஸ்டாவ் எபார்ட், எச்சரித்துமிருக்கிறார்.

"இந்தியாவின் புரம்பிலும், உட்புரத்திலும் இருந்து வந்த ஆதிகுடிகளவிஷயத்திலே,ஆரியர்கள் சிறிதளவும் இரக்கம்காட்டவில்லை. தாசர் எனவும் தாஸ்யூஸ் எனவுமே, ஆரியர்கள், ஆதி குடிகளை அழைத்தனர். புதிதாகவந்த ஆரியர்கள், ஆதி குடிகள் கருப்பாகவும், தட்டை மூக்குடனும் இருப்பதைக்கண்டு,

அவர்களைப்பற்றி வெறுப்புடன் பேச ஆரம்பித்தனர். முதன் முதலாக இந்த இரு ஜாதியினரும் சந்தித்தபோது, நாகரீகத்தைப் பொறுத்தவ்வையிலே, பிரதாதமான வித்தியாசமெதுவும் இருந்திருக்க முடியாது. சுதேசிகள் எவ்வளவு மூடட்டுத்தனமானவர்களாக இருந்திருந்தபோதிலும், பெரும் பான்மையினர் ஓரளவிற்காவது நாகரீகம் பெற்றவர்களாகவே இருந்திருப்பர். ஆரியர்களுடன் கடும்போர் புரிந்தபிறகு, மலைப்பிராந்தியங்களிலுள்ளதங்கள் கோட்டைகளில் பதுங்கிக்கொண்ட ஆதி குடிகளின் தலைவர்களை, ஆரியர்கள் மேலும்மேலும் போரிட்டு வீழ்த்தத்துணிந்ததற்குக் காரணம், ஆதிகுடிகளிடம் செல்வம் பெருகி இருந்ததேயாகும்" எனஆசிரியர் ஒப்பார்ட்டு கூறியுள்ளார்.

இங்ஙனம் பல ஐரோப்பிய நிபுணர்கள் எச்சரிக்கை செய்தும் கண்டித்தும் இருந்தபோதிலுங்கூட, ஆரியரிடமே இந்திய நாட்டுநாகரீகத்தின் சிரேஷ்டமானவைகள் உள்ளன என்ற எண்ணம் இருந்தவந்தது. இல்லையேல், சாகோசினி அம்மையார் கூறியுள்ளபடி பார்ப்பனீய வைதீகங்கள் குடிகொண்டதும், சடங்குகள் நிறம்பியதும், ஆரியரல்லாதவர் மீது துவேஷத்தைக்கற்பிப்பதும், மக்களைப் பிரித்துவைப்பதுமான, வர்ணாச்சிரம தர்மம், வளரவழியில்லை.

அத்தியாயம் 4.

கேம்பிரிட்ஜ் புலவர்கள் கூற்று!

மேனாட்டு, ஆரியப்பித்தர்களின் சூட்டு வெளிப்பட ஆரம்பித்தபோது அவர்கள், "கண்மூடிமௌனியாகி" காரியம்பெரிதே தவிற வீரியம் பெரிதல்ல என்றி ருந்தார்கள். ஆரியப்பார்ப்பனரோவென்றால், இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்றபடி ஒன்றுமே தெரியாதவர்போல் நடித்தனர். பரர்ப்பனரல்லாதார் விஷயத்தைப்பற்றிய சரித்திர ஆராய்ச்சியைத் திறம்பட நடத்தியவர், ஆசிரியர் ரிஸ்டேவிஸ் ஆவர்.

இதைக்கண்டு திகைக்துப்போனவர்கள், இந்த ஆராய்ச்சிகளைப்பற்றிக்கண்டனம் செய்யலாயினர். பல நூற்றாண்டுகளாக மூடிவைக்கப்பட்டிருந்த புராதன விஷயங்களை இப்போதுவன் எடுத்துக்கிளறுவது. இந்ததேச சரித்திரத்தின் சிக்கல்களை, ஏற்கனவே, பாதரும், மனுவும், தீர்த்து வைத்து விட்டார்களே பார்ப்பனீயத்தினின்றும் வழுக்கி விழுந்தவர்கள், பத்தர்கள், இவர்கள் எழுதினவைகளை, நூல்களாக மதிப்ப

தா! அவைகளைப்பற்றிக் கவலைகொள்வதா:.— என்றெல்லாம் கண்டித்தனர்.

இந்தமனோபாவம்படைத்தவர்களுக்கு, விஷயத்தை விளக்குவதென்பது அசாத்தியம். எந்தஆதாரத்தைக் காட்டியபோதிலும் இவர்கள் திருப்தி அடையமாட்டார்கள். எதற்கெடுத்தாலும் சந்தேகமே கொள்வார்கள். அவர்களிடம் விஷயத்தைக் கூறுவதென்பது, செவிடன் காதில்சங்கு ஊதியதுபோலத்தானாகும். இப்படிப்பட்டவர்களிடம் நமக்கிருக்கும் மதிப்பு ஒருபுறமிருக்கட்டும். இவர்களின் கொள்கையுடன் நாம் போர் தொடுத்தே தீரவேண்டுமே? மூடி சூதாட்டம் ஆகிய தீயகுணங்கள் ஆரியர்களிடம் குடிகொண்டிருந்தன. இதற்கு ரிக்வேதமே பலத்த ஆதாரம். சூதாட்டமானது வஞ்சனை மூதலிய தீர்குணங்களை வளர்க்குமென்பதைக் கூறவேண்டுவதில்லை. இதைப்பற்றிய குறிப்புகள் ரிக்வேதத்தில்பல இடங்களிலே காணப்படுகின்றன. இவர்கள்தான், அஞ்ஞான இருளில் இருந்த இந்தியாவிற்ஞான ஒளியைப் பரப்பினார்களாம்! வர்ணம் என்பதற்கு சுதேச பாஷையில் நிறமென்று பெயர். இந்தியாவிற்கு வந்த அன்னியர்கள் தங்கள்ஜாதிஉயர்வை நிலை நிறுத்தவேண்டி கருத்த நிறமுடைய தாஸ்யூசிடமிருந்து பிரித்து தனித்து வாழத் தொடங்கினார்கள். இதுதான் ஜாதி பேதம் வளர்ந்தவிதம். ரிக்வேதத்தில் கூறியுள்ள ஆரியதேவர்கள்வழிபாடே, சிற்சில மாறுதல்களுடன் இன்றைய இந்துமதமாக இருந்துவருகிறது.

ஆகவே இந்துமதமும்,ஜாதிப்பிரிவினைகளும், ஆரியர்கள் இந்தியா வந்தபிறகு, தங்கள் சமர்த்தால் சிருஷ்டித்தவை எனச் சொல்லப்படுகிறது.

"தாஸ்யூஸை"ப்பற்றி அதே, கேம்பிரிட்ஜ் இந்துதேச சரித்திரம் என்ன சொல்லுகிறதென்றால்:—

"ஆதி குடிகள் எந்த அளவுநாகரிகம் பெற்றிருந்தார்கள் என்பது நமக்குத்தெரியவில்லை. அவர்களிடம் ஆடு மாடு மந்தைகள் வயலாக இருந்தன. எதிரிகள்படை எடுத்துவந்தால் அவர்கள் தங்கள் கோட்டைகளிலே புகுந்து பதுங்கிக் கொள்ளுவார்கள். ரிக்வேதத்தில் இந்தக் கோட்டைகளுக்கு "புரம்" என்று பெயர். இவைகள் மண்ணால் கட்டப்பட்டு, பாதுகாப்பிற்காக சுற்றிலும் கற்கள் புதைக்கப்பட்டதாக இருந்தன. ஆதி குடிகள் இங்ஙனமே கட்டிக்கொள்வது வழக்கம். இவைகளைக் கட்டுவதும் சுலபம். ஆகவேதான்எண்ணற்ற இக்கோட்டைகளை

ஆரியர்கள் கைப்பற்றியதாகவும், இடித்துத் தள்ளினதாகவும் ரிக் வேதத்தில் காணப்படுகிறது.

ஆர்யர்கள் பட்டினங்களில் வல்ல சிக்கவில்லை என்றே எல்லா ஆதாரங்களும் தெரிவிக்கின்றன. வேதகாலத்து வீடுகள் எவ்விதம் கட்டப்பட்டன என்பதும் தெரியவில்லை. ஆனால் மூங்கில் உபயோகப்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு வீட்டின் கூடத்திலும் (நடுவிலும்) ஹோமகுண்டம் இருக்கும். அதுவே ஹோமத்திற்கும், வீட்டு சமயற்காரி யங்களுக்கும் பயன்பட்டு வந்தது (இந்த முறையை மேல்நாட்டில் அதாவது குளிர் தேசத்தில் இன்னும் காணலாம். ஓமகுண்டம் என்பதற்கு பதிலாக சூடுண்டாக்கும் சிமிலி என்று சொல்வார்கள்.)

திராவிடர்களைப்பற்றி, கேம்பிரிட்ஜ் இந்து தேச சரித்திரம் 100-ல் 1 பாகங்கூட குறிப்பிடவில்லை. திராவிடர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர். அவர்களைப்பற்றிய விஷயங்கள் எதுவும் அகப்படாத குறையினாலல்ல! ஐரோப்பிய பண்டிதர்களுக்கு இருந்த ஆரியப்பித்தே அதற்குக்காரணம்.

ஆனால் சில சம்பவங்கள் திடுக்கிடக் கூடியமாறு தலைத்தூக்கப்படி எற்பட்டன. ஒரு இக்காலிய பழமொழி உண்டு "ஆர் பாடடம்பல்லாமல் செல்வோன், சுகமாகச் செல்வான். அதிக தூரமும் செல்வான்" என்பது அப்பழமொழியின் கருத்து. அதைப்போலாயிற்று இந்த விஷயம்

அத்தியாயம் 5.

ஆரியப் பூச்சாண்டியின் குட்டு வெளிப்பட்டது.

1922-ம் ஆண்டுவரையிலே, கீழ்நாட்டுக் கலைப்பண்டிதர்கள், இந்தியாவில் வளர்ந்த நாகரிகத்திற்கெல்லாம் ஆதிகாரணம் ஆரியரே என்றும், ஆரியநாகரிகமே சிறந்தது. என்றும் கேம்பிரிட்ஜ் இந்திய சரித்திரத்தில் எழுதிவந்தனர். நூற்றைம்பதாண்டுகள், சமீபகாலம் வரையிலே, மாக்ஸ் முல்லர் எழுதிய கீழ்நாட்டு சரித்திர புத்தகங்கள் தான், இந்து தேச சரித்திராசிரியர்களுக்கு வேதம்! அவர் ஆரியமொழியைப்பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. ஆரிய வம்சத்தைப்பற்றியும் பேசினார். இதுதான், பார்ப்பனருக்கும் வெள்ளையருக்கும் பாசத்தை உண்டாக்கிற்று.

ரெயினாக் எனும் பிரன்ச்சுப்பண்டிதர் ஒருவர் கூறினபடி, "18-ம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலே, மேனாட்டு பண்டிதர்கள், சமஸ்கிருதம்படிக்க ஆரம்பித்தபோது அவர்கள் அதில் லயித்துவிட்டனர். அதிலே இலக்கண அமைப்பு மகா சிக்கலானதாக இருந்தமையால், சமஸ்கிருதமே, ஆரிய மொழி எனவும் கூறப்பட்டது. அது மிகமிகப்புராதன மொழியெனவும் கூறப்பட்டது. ஆதி மனிதன் முதன் முதல் பேசியதும் இம் மொழியே என்றும் கூறப்பட்டது!

இந்தஆர்வங் காரணமாகத்தான், நீதிமன்றங்களின் ஆதரவிலே, திருப்பதி, ராமேஸ்வரம், மற்றும் பல இடங்களிலும், சமஸ்கிருதகலாசாலைகள் நிறுவப்பட்டன. அதாவது தமிழ் போன்ற திராவிட மொழிகள் புறக்கணிக்கப்பட்டு, சமஸ்கிருதமொழிக்கு தென்னிந்தியாவிலே ஆக்கந்தேடப்பட்டது. சமஸ்கிருத மோகங்காரணமாக' தமிழின் குறவஞ்சியும் நெறிக்கப்பட்டது. மற்றைய திராவிட மொழிகள் சவங்களாயின.

இந்தியாவின் ஆதிகுடிகள், நகரங்களிலேயும், கோட்டை கொத்தளங்களிலேயும், நாகரிகமாக வாழ்ந்து வந்தார்கள், என்று ஆரியர்கள் சிந்தனை செய்யவும்மறுத்தார்கள். ஏனெனில் ஆரியர்களுக்கு 'தாள்பூஸ்'களிடம் அவ்வளவு வெறுப்பு இருந்திருக்கிறது. தங்களைவிட, திரேக வளர்ச்சி, மனப்பாங்குபாடு, சமூதாய மதத்துறைகள் ஆகிய யாவற்றிலும், ஆதிகுடிகள் குறைந்தவர்கள், கேவலமானவர்கள், என்றதை தியேஉறுதியாகஆரியர்கள்கொண்டார்கள். இந்திய நாகரிகவளர்ச்சியில் ஆதிகுடிகளுக்கு பங்கேகிடையாது என்பது அவர்கள் எண்ணம் என்று சர். ஜான் மார்ஷல் கூறுகிறார்.

ஆனால், மகன்ஜதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் கல்வெடடு ஆராய்ச்சி நடந்த காலையில், சைவசமயம், மிகப்புராதன காலத்தது என்பதும், ஆதிகுடிகளின் சமயம் என்பதும் விளக்கப்பட்டது. ஆரியர்கள் யார் என்பதும் தெரியாத காலத்திலே, ஐயாயிரம் ஆண்டிற்கு முன்னால், பஞ்சாப், சிந்து முதலிய பல பிரதேசங்களிலே, உன்னதமான நாகரீகம் பரவி இருந்ததென்பதும், அந்த நாகரீகம், அக்காலத்து மெசபடோமியா, ஈஜிப்ட்டு நாடுகளின் நாகரீகத்தைவிடச் சிறந்தது என்றும், யார் தான் எண்ணியிருக்க முடியும்! ஆனால், மகன்ஜதாரோ ஹரப்பா கல்வெட்டுகள் கூறும் உண்மை இதுவே! துளியும் ஆரியக்கலப்பற்ற, அரும்பெரும் நாகரீகம் ஐயாயிரம் ஆண்டிற்கு முன்பே பஞ்சாப், சிந்துவரைபரவி இருந்த உண்மை விளங்

கிற்று! இந்த நாகரீகம் ஆரியர்களால் சிருஷ்டிக்கப்பட்டதென்ற கூற்று பொய்த்தது! ஆரியர்கள் இலேசானவர்களா? பெரும் பூஞ்சு அவர்கள் சொந்த சொத்தல்லவா! இராமாயணத்தை ஆராய்ச்சி செய்தாலே ஆரியவண்டவாளம் விளங்குமே!

இந்திய நாகரீகத்தைதிராவிடர்வளர்த்த விதத்தைப்பற்றிச் சரியானபடி மதிப்பிட முடியாமற் போனதன் காரணம், நீண்ட நாட்களாகப்பரவி நம்பப்பட்டுவந்த ஆரிய உயர்வே யாகும் என, சென்னை சட்டசபை அங்கத்தினராக இருந்த, சென்னை சர்வகலாசாலை பொருளாதாரப்போராசியர் காலஞ்சென்ற டாக்டர் கில்பர்ட்சிலேட்டர் கூறியுள்ளார். மேலும் அவர் இந்திய நாகரீகத்தில் திராவிட அம்சங்கள்என்ற தமது நூலில் கூறுவ தாவது. இந்தியர்கள்தாங்கள் ஆரியர்களெனவும், தங்கள் நாகரிகம், மதம், ஆகியவைகள் ஆரியமென்னவும், உடும் புப்பிடியாக ஒரு எண்ணத்தைக் கொண்டுள்ளார்கள். வடமேற்கு இந்தியாமீது படை எடுத்துவந்து, சமஸ்கிருத மொழியை இந்தியாவில் புகுத்தியவர்கள என்பவர்களுக்கு ஆரியர்கள் என்று பெயர் என்பதோடு நிறுத்தினால் பொருத்தமாக இருக் கும். ஆனால் ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ இருந்த தங்கள் பூர்வீன பிரதேசத்தை விட்டுப்பிரிந்து ஆரியர் என்றொரு ஜாதியினர் இந்தியா, பெர்ஷியா, ஐரோப்பா முதலிய இடங்களில் புகுந்து பரவினரெனவும், அந்தந்த பிரதேசத்து ஆதிகுடிகளெல்லாம் கீழ்தரமானஜாதிகளெனவும், அவர்கள் யாவ ரைக் காட்டிலும் இந்த 'ஆரியர்'நாகரீகத்தில் உயர்ந்தவரெனவும் இந்தோ-ஜெர்மானிய வம்சமொழிகளை இவர்கள், தாம் சென்ற இடமெங்கும் பரப்பினரெனவும் மற்ற எல்லா ஜாதி களைக்காட்டிலும் இந்த ஆரியர்களே உயர்ந்த ஜாதிக்காரரென வும், மாக்ஸ்முல்லர் புகுத்தும்தத்துவத்திற்கு ஆதாரம் தேடித் தேடி அலைந்து முடிவில் இதுஆதாரமற்றதென்பது தெண்ண மாயிற்று. மாக்ஸ் முல்லரும்மொழியை ஆதாரமாகக்கொண்டு ஜாதியை நிர்ணயிக்க முடியாதுஎன்ற முடிவிற்கே வந்து சேர்ந் தார்.

அத்தியாயம் 6.

ராமாயணம்—போராட்டம்!

திராவிடர்கள் யார்? என்பதைப்பற்றி விவாதிக்கு முன்பு இந்து தேச சரித்திரத்தின் அமைப்பைப் பற்றி சற்று கவ னிப்போம். நேற்றும் இன்றும் பள்ளிக்கூடங்களில் சரித்திரம்

போதிக்கப்படும் விதத்தைக்காண்போம். இந்தியாவிலே இரு பிரிவினருண்டு, அவர்களே ஆரியர்கள், தாஸ்யூஸ் எனப்படுவோர் என்றே சரித்திரம் கற்றுக்கொடுத்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு திராவிடர்கள் என்று மூச்சுவிட ஆரம்பித்தனர்! அவர்களும், தாஸ்யூஸ்க்கள் தான்என்று ஒதுக்கப்பட்டு விட்டது. திராவிடர் நாகரீகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. கீழ்நாட்டுக்கலை நிபுணர்கள் கோஷம் அந்தப்பேச்சையே மூலையில் உட்கார வைத்து விட்டது. ஆரியர் முன்பு, திராவிட மக்களாகட்டும்மற்றதுதானாகட்டும்நிற்க முடியுமா! ஆம்!முடியாது! எதுவும் நிற்கவுமில்லை! ராமாயணம் என்ற இதிகாசம் வடநாட்டு ஆரியர்கள் தென்னாட்டு திராவிடரை ஜெயித்த விஷயத்தைத் தவறாமலே யாரும். அது சரித்திர ஆதாரமுடையதென்பது சில காலத்திற்குப் பிறகு உறுதியாக்கப்பட்டதென்றாலும் அது இரு நாகரீகத்திற்தும் எற்பட்ட போராட்டத்தை குறித்தது என்பது மட்டும் நிலைத்து நிற்கிறது. அதைப் பிறகு கவனிப்போம். ராமாயணம்சரித்திர ஆராய்ச்சி முன் நிற்கக் கூடியது என்ற புளுகு வெளிப்பட்டதைக் கவனிப்போம். மூப்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்த போர் தென்னாட்டில் மூண்டு விட்டது. பார்ப்பன—பார்ப்பனல்லாத படிப்பாளிகள் போருக்கும் அன்றுதான் வித்துஊன்றப்பட்டது. இராமாயண ஆராய்ச்சியில் பிரபல திராவிட புறிவாளிகள் இறங்கினார்கள். அதன் பின்தான் ஆரியக்குட்டுகள் ஒவ்வொன்றாக வெளியாயின. சில சரித்திரிகாசிரியர்கள வடநாட்டு ஆரியர்கள் தென்னாட்டை வென்றதை விளக்கும் ஆரியரின் கீர்த்திப்பிரதாபத்தை பற்றிய சித்திரமே இராமாயணம் என்றனர். "இராமயண நீதி" என்ற தலைப்பில் தோழர் டி. பொன்னம்பலம் அவர்கள் அந்த காலத்தில் மிக உயர்ந்த நாகரீகத்திலிருந்த திராவிடரை வேண்டுமென்றே குறைகூறித் தூற்றி ஆரியரைப் பற்றிய வீண் பிரதாபங்களைக் கூறுவதே இராமாயணம் என்பதை விளக்கினார். வால்மீகி எழுதிய இராமாயணத்தை மிக நுட்பமாக திராவிட அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து, ஆரியர் பரப்பி வைத்திருந்த அபத்தங்களைச் சந்திக்கு இழுத்துவிட்டனர்!

இராமாயண காலத்திலே ஆரியர்கள் மெல்ல, தென்னாட்டுக்கு குடி ஏறிவந்தார்கள். டெரிபட்டிணங்களிலே அவர்கள் புகவேயில்லை. காடுகளிலே குடிசைகள் அமைத்துக்கொண்டு அங்கே வசித்துவந்தனர். இன்று இந்தியாவைக் கெடுத்துவரும் ஜாதிச் சனியனின் சாயல்கூட அன்று இருந்தகாகத் தெரியவில்லை, என்ற ஆராய்ச்சி பூர்வமானமுடிவை தோழர் V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வெளியிட்டார்

தென்னிந்தியாவிற்கு அக்காலத்தில் 'தமிழகம்' என்றுபெயர். இங்கு தமிழ் மன்னர்களாம் சோசோழ பாண்டியர் அரசாட்சி வந்தனர். பாண்டிய மன்னரைப்பற்றி, வால்மீகி பிரத்தியேகமாகக்குறிப்பிட்டுள்ளார். அக்காலத்திலே ஆரியர்கள், புறம் போக்குகளிலே குடி ஏறி வசித்து வந்தனர். பட்டிணங்களிலே புகவில்லை.

இந்த காட்டு மன்னர்களும் (சிலோன்) இலங்கை மன்னனும் திராவிடர்களாகவோ, திராவிடவர்சத்தைச் சேர்ந்தவர்களாக வோதான் இருக்கமுடியும். அவர்களுடைய ஒழுக்கம், கலைகளே வளர்த்த விதம் இவைகளே அவர்கள் கால நாகரீகத்தை வெளிப்படுத்துவனவாகும். வால்மீகியால் வர்ணிக்கப் பட்டுள்ள, பாண்டியமன்னன் தங்கக் கோட்டையும், இலங்கைப் பட்டினை சிங்காரமும், வெறும் கற்பனையாகவே இருக்கமுடியாதுஎன, தோழர் பொன்னம்பலம் அவர்கள் எழுதினார். ஆசிரியர் கஸ்டாவ் ஒப்பார்ட்டும் தமது "இந்தியாவின் ஆதி குடிகள்" என்ற நூலிலே, "ராமாயணத்திலேயே, இலங்கையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. நகர அமைப்பு, மாட மாளிகைகளின் சிறப்பு, அரசாட்சியின் நிர்வாகத்திறமையைப் பற்றியும் புகழப் பட்டிருக்கிறது. தெருவிலே எதேனும் விலையுயர்ந்தபொருள் தவறி விழுந்துவிட்டால், அதையுங்கூடக் கள்ளன் கொண்டு போகான் என்று கூறப்பட்டிருப்பது, நிர்வாகத்திறனை விளக்கும் அத்தாட்சி யன்றோ. ஆகவே, சாதாரணமாகக் கூறப்படுவது போல, இராமருடைய எதிரிகள் அவ்வளவு காட்டுமிராண்டிகளாக இருந்திருக்க முடியாதே" என்று எழுதிபுள்ளார்.

இராமாயணத்தைப் பற்றிய சரித்திர ஆராய்ச்சி தொடங்கினதும், சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதியான, காலஞ் சென்ற, ஸர். டி. சதாசிவ ஐயர்சீறி விழுந்தார். இவ்விதஆராய்ச்சியைக் கண்டிக்க முற்பட்டார். "சமஸ்கிருத வேதம், திருவாய் மொழி, ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீராமர்முதலியவைகளிலிருந்தும்தம்மை விடுவித்துக் கொண்டு ஆரியர்களுக்கும் பிராமணருக்கும் விரோதமான புரட்சியை செய்யலாம் என பார்ப்பனரல்லாதார் எனப்படுபவரும், தென்னாட்டு வேளாளருமாகிய என் நண்பர்கள், மனப்பால் குடிக்கிறார்கள். இது பலிக்காது" எனக்கூறி, அவர்களைச் சபித்தார்.

1931-ம் ஆண்டு கூட சர். ஜான் மார்ஷல் எழுதுகையில் குறிப்பிட்டதாவது:—

"எப்படி கிரேக்கர்களுக்கு, இலியாதும், ஒடிசியும் (பெருங் காப்பியங்கள்) ஆதி கிரந்தங்களெனக் கருதப்படுகின்றதோ, அதைப்போலவே பெரும் பான்மையான இந்தியர்களுக்கு, வேதத்தைக்காட்டிலும் அறிவோ எழுச்சியோ தரும் காப்பியம் வேறு கிடையாது என்ற எண்ணம் இருந்துவருகிறது" என்று அவர் கூறியுள்ளார். வேதத்தைத் தவிர்த்து வேறு நூல்களைத்தேடுவதே, போக்கிரித்தனமாகவும், பாபச் செயலாகவும் கருதப்படும் என்று ஆசிரியர் ரிஸ்டேவிஸ் கூறுகிறார்.

ஆசிரியர் ஆர்,சி. டட் இராமாயணம் சரித்திரமாகாது என்று எடுத்துக் காட்டியதை தோழர் பொன்னம்பலம்சுருக்கிப்பிட்டிருக்கிறார். ஆசிரியர் டட் கூறியுள்ளபடி, மகாபாரதத்தைப் போலவே இராமாயணமும் சரித்திர பூர்வமான உண்மை நிகழ்ச்சியல்ல. இரு இதிகாசங்களிலும் வரும் கதாநாயகர்கள், சுறபனவீரர்களேயாகும். நிலத்தை உழும் கலப்பைக்கு சீதா என்ற பெயரிட்டு ரிக்வேத காலமுதல், தெய்வமாகக் கொண்டாடும் வழக்கமிருந்து வந்தது. உழவுத் தொழிலை தென்னாட்டில் செய்ய ஆரம்பித்த காலத்திலே, கற்பனையாக சீதையைப் பெண்ணாக்கி தெய்வீகத்தையும் புகுத்தி விதேயநாட்டு ஜனக மன்னரின்மகளெனவும், அவளைத்தன்னாட்டிற்குத்தூக்கிச் சென்றதாகவும் கதை எழுதப்பட்டது. சீதையின் மணாளனும் கோசல நாட்டு மன்னனாகவும் கூறப்படும் இராமர் யார்? பிற்கால புராணங்களிலேஇராமர் விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லப்பட்டது. இத்தசமயத்திலே விஷ்ணுவிற்கு அவ்வளவு சிரேஷ்டம் கிடையாது. இதிகாச காலங்களிலே இந்திரனே போற்றி வணங்கப்பட்டகடவுள். பாரங்கர கிருஹ்ய சூத்ரத்திலே, சீதை, அதாவது கலைப்பையைத்தேவி, இந்திரனின் பத்தினி என எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே மகாபாரதத்தில் எப்படி அர்ஜுனன் இந்திரனின் அவதாரமென்றும், மழையில்லாக்கொடுமையைப் போக்கபோரிட்டானெனவும் கூறப்படுகிறதோ அதைப் போன்றே ராமாயணத்தின் கதாநாயகனாம் ராமன், இந்திரனின் அம்சந்தானோ? இந்திரனைப்பற்றி இரு புராணங்கள் உள்ளன. வடநாட்டிலே கடந்தபோரை வருணிக்கும் இதிகாசம் ஒன்று தென்னாட்டை வென்ற விஷயத்தைக்குறிப்பிடுப இதிகாசமமறொன்றுளன ஆசிரியர்டட் கூறுகிறார். வால்மீகி இராமாயணம்எற்பட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே ராமரைத் தெய்வமெனக் கொண்டாடலாயினர், அதுவும் கூட இராமாயணம் ஏற்பட்ட பிறகுதான் அதற்குமுன்பெல்லாம், ராமன்என்றொரு தெய்வத்தை தென்னாடு கண்டதில்லை கேட்டதுமில்லை.

வடநாட்டு ஆரிய நூற்களைதிராவிட அறிவாளிகள் ஆராய்ச்சி செய்வ தென்பது அடாதகாரியமெனக் கருதப்பட்டது. அந்தக் காரியத்தைச் செய்யும்உரிமை பார்ப்பனருக்கே உண்டு. ஆரிய மதத்தைத் தென்னாட்டில் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த பார்ப்பனரும் .இந்தப்பணியைச் செய்ப முடியாது. செய்தால், :உண்மை வெளிபாகி ஆரிய மதத்திற்கே யன்றோ ஆபத்து! திராவிட நாட்டிலே அறிவாளிகள் போக்கு இந்த நிலைமையில் தான் இருந்தது,

அத்தியாயம் 7.

திராவிட நாகரீகம்.

இருபத்தைந் தாண்டுகளுக்கு முன்பு நான் ஒரு இந்திய சர்வ கலாசாலையில் படித்து பி. ஏ. பட்டம் பெற்றேன். அப்போ தாவது, சரித்திரம் படித்தபோதாவது, சிலகாலம் சரித்திரபோ தகாசிரியராக நான் இருந்த காலத்திலாவது திராவிடர்களைப் பற்றியோ அவர்களுக்கென ஒரு நாகரீகம் இருந்ததாகவோ கேள்விப்பட்ட தில்லை. அவர்கள் வெறும் தாசர்கள். இந்தியாவின் ஆதிகுடிகள் காட்டுமிராண்டிகள். போராக்குறைக்கு மனு போன்றார், அவர்களைசூத்திரர் ஆக்கினர்! இன்றும் கூட திராவிடர்களைப் பற்றி இந்திய மாணவர் களுக்குத் தெரிந்த விஷயம் இவ்வளவு தான் என எண்ணுகிறேன். சமஸ்கிருத மொழிவல்லவரான கேம்பிரிட்ஜ் இந்துதேச சரித் திரமெழுதியவர்களுக்குத் தெரிந்தவிஷயமும் இவ்வளவே தான். எழுநூறு பக்கங்கள் கொண்ட அந்த புத்தகத்திலே, திராவிடர் களைப்பற்றி பதினைந்து பக்கங்களே எழுதப்பபட்டுள்ள புராதன இந்திய சரித்திரத்தைப்பற்றி எழுதப்பட்ட புத்தகங்களிலே அது தான் முதல் ரகமானதெனக் கருதப்படுவது. நம்பிக்கை இருக்கிறதே அது, உண்டான விதம் எப்படி இருந்தாலுஞ் சரி, அது நாளாகநாளாகத் தானாகப் பரவிக்கொண்டே வருவது இயற்கை. விதைபோட்டு முளைக்காமலே கிளையை ஒடித்து நடுவதன் மூலம் புதுச்செடிகள் உண்டாக வில்லையா? அதைப்போலத்தான ஒரு காலத்திலே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு அபிப்பிராயம் எவ்வளவு சோடையானதாக இருந்தாலும், புது உருவுடன் பரவ ஆரம்பிக்கும் என ஆசிரியர் டயிலர் என்பார் கூறியுள்ளார். அதைப்போலவே, ஆரிய மோகம் குறையவில்லை. திராவிட நாகரீகத்தைப் பற்றிய ஞான சூன்யமும் மாறவில்லை. பிளய்ஸ் என்ற ஆசிரியர், "காட்டுமிராண்டிகளே வாழ்ந்து வந்த இந்தியா மீத ஆரியர் பிரவே

சித்து நாகரீகத்தைப் பரப்பினர் என்ற எண்ணம் நீண்ட நாட்களாகப் பரவி இருந்து வருகிறது. தென்னிந்திய நாகரீகத்தைப் பற்றித்தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதற்கான புத்தகங்கள அகப்படுவது அருமையாகஇருக்கிறது" என்கிறார் என் புத்தகங்கள் ஏராளமாக இல்லை என்பதனைப் பிறகு விளக்குவோம். அவருக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு ஆசிரியர் டாக்டர் கில்பர்ட்சிலேட்டர் 1924 ல் கண்டறிந்த முடிவுகளைக் கீழே தருகிறோம்,

1 ஆரியர் இந்தியாமீது படைஎடுத்து வந்தகாலத்திலே, திராவிடர், மிகவளர்ச்சி அடைந்தநாகரீகத்தைப் பெற்றிருந்தார்கள். ஆரியர் வாழ்க்கைக்கு "நாகரீகம்" என்ற பெயர்தகுமானால் அதனைவிட மேம்பட்ட நாகரீகமே, திராவிடருடையது.

2 ஏதாவது வெளிநாட்டு நாகரீகத்துடன் திராவிட நாகரீகம் சம்பந்தப்பட்டதா என்று பார்த்தால், கடல்வியாபாரத்தால் இந்தியாவுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்த ஈஜிப்து மெசபடோமியா நாடுகளையே கூறவேண்டும்.

3 மதத்துவங்கள், பூசாரிவகுப்பு அதன் அதிகாரம் ஆகிய அம்சங்களைக் கொண்டு பார்த்தால், திராவிட நாகரீகமும், ஈஜிப்டு மெசபடோமியா தேசநாகரீகமும், ஒரேவிதமானவைகளாக்க் காணப்படும்-

4 ஈஜிப்டு நாட்டினர், செங்கடலை கடந்து பண்டிநாட்டிற்கு வந்தபிறகே, இந்தியா ஈஜிப்டுடன் சம்பந்தப்பட்டது: கடற்பிரயாணம் திராவிடர்களுக்கும் தெரியும். ஆனால் அதிக பிரக்ஞை திபெற்றவர்களல்ல. அவர்கள், ஈஜிப்ட்நாட்டு படகுகளைப் பார்த்தே, அவைகளைப் போலவே படகுகள் தயார் செய்தனர். டாக்டர் சிலேடர் திராவிடநாகரீகத்தைப்பற்றி எழுதிபபிறகு: 1931ம் ஆண்டு, சர் ஜான். மார்ஷல், சிந்துபிரதேச நாகரீகத்தைப் பற்றி, கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்,

"சிந்துப்பிரதேச நாகரீகம், ஆரியகாலத்திற்கு முற்பட்டது. அதைப்போன்றே சிந்துப்பிரதேசமொழிகளுமாகும் அந்தமொழிகளில், ஏதாவதொன்று திராவிடசம்பந்த முடையதாக இருக்கும் இந்த யூகத்திற்கு மூன்று காரணங்கள்உள்ளன. ஒன்று, ஆரியர்களுக்கு முன்பே, வடஇந்தியாவில் வாசம் செய்து வந்தவர்கள், திராவிடர்களாவர். சிந்துபிரதேசநாகரீகத்திற் கொப்பான நாகரீகத்தை அவர்களே பெற்றிருக்கமுடியும்.

இரண்டாவதுகாரணம், சிந்துநதிதீரத்திற்கு அருகிலுள்ள, கிரிதார் மலைப்பிர தேசத்திலுள்ளபலுஜிஸ்தானத்து பிராகு வகுப்பி

னர், திராவிடமொழியை அனுஷ்டானத்தில் கொண்டுள்ளார். ஆரியகாலத்திற்கு முன்பு, அங்கபாகமெல்லாம், திராவிட மொழி பொது பாஷையாக இருந்திருக்கவேண்டும். மூன்றாவதாக, சமர்க்ணவாய்ப்பிர தேசத்து மொழிக்கும் திராவிட மொழிக்கும் ஒசேவிதமான இலட்சண முண்டுஎன்பது மொழி ஆராய்ச்சி மூலம் விளங்குகிறது.

ஆனால், ஆரிய நாகரீகமே திராவிடநாகரீகத்தை விடப்பழமையானது என்ற எண்ணம் பரவியதற்குக் காரணம்என்ன வென்றால், புராதனத்தை விளக்கக்கூடிய கட்டிடங்களோ, எடுகளோதிராவிடரிடமில் லாதேதயாகும். அவ்விதஆதாரங்களே திராவிடரிடமிருந்த தில்லை என்பதல்ல. ஆனால் அவர்கள் உபயோகித்த வஸ்துக்கள், வெகுவிரைவில் அழிந்து போகக்கூடியதாக இருந்தமையால், ஆதாரங்கள் இன்று இல்லாமற் போய்விட்டன மேலும் தென்னாட்டு சீதோஷ்ண ஸ்திதியும், எடுகளைத்தின்னும் பூச்சிகள் தொல்லையும், பழய எடுகள் அழிந்துபட்டதற்கு முக்கியகாரணங்களாகும். இன்றுகாணப்படும் கோயில்களைக் கண்டால், அவைகள் இதற்கும் புராதனமாகஇருந்த நாகரீகத்தை இரவல்வாங்கியன என்பதுதான் தெரியவருகிறது.

பாறைகளால் கட்டப்பட்ட அக்கோயில்களில், மிக அருமையான சித்திர வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இந்த அருமையான சித்திரக்கலையை, எவ்வளவோ நூற்றாண்டுகளாகப் பழகிப் பழகிக் கற்றுக்கொண்ட சிற்பிகளே வெளிப்படுத்தி இருக்கமுடியும். காஞ்சியில் உள்ள கோயிலொன்றைக் கண்டால் இந்த சித்திரக்கலையின் சரித்திரம் தெள்ளெனத் தெரியும்.

தென்னாட்டில் காணப்படும் கோயில்களின் சிங்கார சித்திர அலங்காரத்திற் கீடான ஒரு கோயிலும் வடநாட்டில் கிடையாது.

"வேதகாலத்தது என்று கூறக்கூடிய அளவு புராதனமான திராவிடசிற்பம் ஒன்றும் காணப்படவில்லை என்ற போதிலும், சிற்பம், இலக்கியம் ஆகிய துறைகளில் ஆரியநாகரீகத்தை விடப் பழமையானது திராவிட நாகரீகமென்பது" விளங்குகிறது.—என சர்ஜான் மார்ஷல் கூறியுள்ளார்.

டாக்டர் ஊலியும் சர்ஜான் மார்ஷலும்

மெசபடோமியாவிலுள்ள 'யூர்' பிரதேசத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே 1924ல் டாக்டர் சிலேட்டர் குறிப்பிட்டிருப்பதாவது:-

"ஈஜிப்டிலிருந்தோ, மெசபடோமியாவிலிருந்தோ நாலாயிரம், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் திராவிட இந்தியாவிற்கு, நாகரீகம் வந்தது. மிக வளப்பமான திராவிட பூமியிலே, மிக கூர்மையான புத்திபடைத்த திராவிடரின் அறிவு நீர் ஊற்றப்பெற்று, அந்த வித்துகள், ஊன்றி, நாகரீகம் ஓங்கி வளர்ந்தது.

1931-ல் சர். ஜான் மார்ஷல் எழுதிய "மோகன் ஜதாரோவும், சிந்துதீர நாகரீகமும்" என்ற அருமையான புத்தகத்திலே "சிந்துநதி தீர நாகரிகம் வெளிப்படும்முன்பே டாக்டர் ஹால், சுமேரியர்கள் மெசபடோமியாவின் கீழ்க்கோடியில் வசித்துவந்தனரெனவும், அவர்கள், திராவிட வகுப்பினரைப் போன்றவர்களே யெனவும் இன்று தென் இந்தியாவில் மட்டுமே வாசம் செய்யும் திராவிடர்கள் ஒருகாலத்தில், பஞ்சாப், சிந்து, பலுஜிஸ்தானம் ஆகிய பிரதேசங்களிலும் பரவி வாழ்ந்து வந்தனரென வும், திராவிட மொழிச்சாயலை இன்றும் பிராகு வகுப்பினர் கையாண்டு வருவதே இதற்குச்சான்றெனவும், கூறியுள்ளார். மகன் ஜதோரோ, ஹரப்பா, கல்வெட்டுகளின் மூலம், திராவிட-சுமேரியா ஒப்புவமை விளக்கப்பட்டதால், மேற் கூறப்பட்ட தத்துவம் பலப்பட்டது. இதைப் பற்றித் தமது முடிவான அபிப்பிராயத்தைக்கூற, வேறுபலஆதாரங்கள் வேண்டுமென, சர்ஜான் மார்ஷல் கூறியபோதிலும், இந்தக்கொள்கை, இப்போது பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது என்பதையும் கூறுகிறார்.

சுமேரியர்களின், சிலைகள், மற்றும் ஆராய்ச்சிக்குக் கிடைத்த பொருள்கள், இவ்வகளைக் கவனிக்கும்போது, அவர்கள் ஆரியர்களோ சிபைட் வகுப்பினரோ அல்ல என்பதும் இந்தியாகாட்டினர் தான் என்பதும்தெரிய வருகிறது சுமேரிய உருவம் பெரும்பாலும் திராவிட உருவைப்போன்றே யிருக்கிறது. தக்காணத்து திராவிடனைப்போன்றே சுமேரியன்காணபட்டான். சுமேரியர்கள் என்பவர்கள் இந்திய நாட்டினரென்பதும், அவர்கள் பெர்ஷியா வழியாகச் சென்று சுமேரியாவில் தங்கியிருப்பார்கள் என்றும் கூறுவதுபொருத்தமுள்ளதாகவே இரு

சூரிய ஒளியில் மின்சாரம்.

இப்பிரபஞ்சத்திலுள்ள சகல சக்திகளுக்கும் காரண பூதமாயிருப்பது சூரியன். சூரியன் இல்லையேல் பிரபஞ்சத்தில் எப்பொருளும் தோன்றியிரா.

அத்தகைய சூரிய உஷ்ணம் கோடை காலத்தில் வீணாக்கப் படுகிறது.

இங்கிலாந்தில் கோடைக்காலத்தில் வீணாக்கப்படுகிற உஷ்ணம் கூடுமித்து வைக்கப்பட்டால் மாரிகாலத்திற்கு தாராள மாக உபயோகப்படக்கூடும்.

நாம் உஷ்ணத்திற்காக நிலக்கரியையும் எண்ணெயையும் உபயோகப்படுத்துகிறோம்.

இவைகளுக்கு எவ்வளவு சக்தியுண்டோ அதற்குமேல் ஆயிரம் மடங்கு அதிகசக்தியை அதற்கு கொடுத்து அதை உபயோகிக்கிறோம்.

நதிகள், சமுத்திரங்கள் எல்லாம் அவைகளுக்குள்ள சக்திகளுக்குமேல் உபயோகிக்க முடியா. காற்றின் சக்தியோ ஒழுங்கினமானது.

மனிதனுடைய தேவையதிகரிப்பதாலும் சுகமான வாழ்க்கையை நடத்த விரும்புவதாலும் புதிய சக்திகளை கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் மனிதனுக்கு உண்டாயிற்று.

இதனால் விஞ்ஞானிகள் இயற்கை சாதனங்கள் ஒவ்வொன்றையும் சோதனை செய்ய ஆரம்பித்தார்கள்.

க்கும். அவர்கள் இந்தியாவில் சிந்து நதிதீரத்தில் வாசம் செய்துவந்தபோது நாகரீகத்தை வளர்த்து தாங்கள் குடியேறிபபிரதேசங்களில் பரவவைத்தனர் என்பதும் உண்மையாகவே இருக்கவேண்டும். ஆகவே, இந்தியாவின் ஆதிநாகரீகம் ஆரிய நாகரீகத்திற்கு முற்றிலும் வேலானது, அதைவிட சிலாக்கியமானது என்பதும் தெரியவருகிறது.

வாஷிங்டன் ஸ்மித்ஸோனீயன் ஆராய்ச்சி சாலையில் டாக்டர் ஆப்பட் பல வருடங்களாக சூரியனது உஷ்ணத்தைக்கொண்டு எவ்வாறு இயந்திரங்களை ஓட்டலாம் என்பதுபற்றி ஆராய்ந்து வந்தார்.

தூதன இயந்திரம்.

இவரது ஆராய்ச்சியின் பயனாக சூரியனிடமிருந்து சக்தியை பெற்று ஓடக்கூடிய ஒரு தூதன இயந்திரத்தைகண்டு பிடித்தார்.

சில வருடங்களுக்குப் பின் கெய்ரோவுக்குப் பக்கத்தில் அதன் சக்திக்கு மேல் மூன்று பங்கு வேகத்தில் செல்லக்கூடிய ஒரு இயந்திரத்தை பரீக்ஷார்த்தமாக செய்து பார்க்கப்பட்டது.

80 சதுர அடி விஸ்தீரணத்தில் பாய்கிற சூரிய கிரணத்தைக் கொண்டு ஒரு குதிரை வேகசக்தி உண்டுபண்ணலாம் என அதைக்கண்டு பிடித்தவர் ஊகித்தார்.

இவர்களுடைய ஆராய்ச்சிக்கு கண்ணாடி தான் ஆதாரமானதாயிருந்தது.

பூமியின் மேல் சதா சுழலக்கூடிய ஒரு சட்டத்தில் பூமியை நோக்கி கிரணங்கள் செங்குத்தாப் விழுத் தக்கவாறு கண்ணாடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

அங்கு கறுப்பு எண்ணெய் குழாய்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் மீது அந்தகிரணங்கள் செலுத்தப்பட அவைகளில் உள்ள எண்ணெய் சூடாகிறது. அந்தஉஷ்ணத்தைகாப்பதற்காக இரட்டை 'வேக்குவம் ஜாக்கட்டு'கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறுநீராவிஉண்டாக்கபடுகிறது. இந்த நிராவியை சமயல் முதலியகாரியங்களுக்கு உபயோகப்படுத்தலாம்.

கலிபோர்னியாவிலுள்ளமௌண்ட்வில்சனில் எவ்வளவோ ஆச்சரியப்படத்தக்க காரியங்கள் இதனால் செய்யப்பட்டிருக்கின்றன.

சமசீதோஷ்ண மண்டலத்திலே சூரியன் அவ்வளவு பயன்படுகையில் உஷ்ண மண்டலத்தில் இன்னும் எவ்வளவோ மடங்கு பயன்படும்.

உஷ்ணமண்டலத்திலே இதன் உபயோகம் கையாளப்படுமாயின் எத்தனையோ வக்கர் நிலங்கள் இம்முறையால் சுலபமாக தண்ணீர் பாய்ச்சப்பட்டு செழிக்கச் செய்யக்கூடும்.

இனஜின் அமைப்பு.

டாக்டர் ஆப்பட் நிர்மாணித்தசூரிய இன்ஜின் அமைப்பு மிக எலபமானது தான்.

தண்ணீரை சூடாக்குவதற்காக ஒரேதிக்கில் சூரியகிரணங்கள் விழுத் தக்கவாறு வளைந்த கண்ணாடிகள் உபயோகிக்கப்படுகின்றன. பாயிலரில் எல்லா பாகங்களிலும் உஷ்ணம் படும்படியாக அக்கண்ணாடிகள் சுழன்றுகொண்டே இருக்கும்படி அமைக்கப் படுகின்றன.

ஆரம்பகாலத்தில் இந்தஇன்ஜினில் உள்ள குறைபாடு என்ன வெனில் இன்ஜின் ஒரு பெரியபாரமாயிருந்தது.

ஒரு இடத்தில் நாட்டப்படுகிற இயந்திரம் 1/3 ஏக்கர் விஸ்தீ ரணத்துக்கு பயன்படுகிறது. 50குதிரைவேக சத்தியைத்தான் உற்பத்தி செய்யக் கூடியதாய் இருக்கிறது.

டாக்டர் ஆப்பட் கண்டுபிடித்த இன்ஜின் ஆரம்பத்தில் மிக பாரமானதாயிருந்தாலும் நாளடைவில் சீர்படுத்தப்படலாம் என்ப தில் சந்தேகமில்லை.

மிஸ்டர் பிராங்ஷ்மான் மோட்டார் எகிப்தில்பரீக்ஷை செய் துபார்த்ததில் வெற்றியே அளித்திருக்கிறது.

அதற்கென தனி பாயிலரும்நீராவி இன்ஜினும் அமைத்து அதன் மூலமாக தண்ணீர் இறைத்து நிலங்களுக்கு பாய்ச்சப் பட்டது.

போட்டி இன்ஜின்கள்

இந்த இன்ஜினுக்குப் போட்டியாக பெட்ரோல் இன்ஜின் கள் இருக்கின்றன.

இவைகள் குறைந்த செலவில் கிடைக்கக்கூடியவைகளே. ஆனாலும் இன்னும் சிறிது காலத்தில், பெட்ரோல் அரிதாய்ப் போய்விடும். அந்தக்காலத்தில் இந்த இன்ஜின்கள்தான் அதிக மாக உபயோகப்படும்.

இத்தகைய இன்ஜின்கள் அமெரிக்கா நாட்டில் முயற்சி செய்து பார்த்ததில் வெற்றியை அளித்திருக்கின்றன.

பாஸடேனாவில்அமைக்கப்பட்டிருக்கும் ஒரு இன்ஜின் ஒரு சிறந்த குடையைப் போல் காணப்படுகிறதாம். உருக்கால் செய்யப்பட்ட பாயிலரில் கிரணங்கள் விழுத்தக்கவாறு 1788 சிறு கண்ணாடிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

உஷ்ணத்தை வெளிப்படுத்தாத உலோகத்தால் செய்த மூடியால் அந்த பாயிலர் மூடப்பட்டிருக்கிறது.

ஒரு மணி நேரத்தில் குளிர்ந்த தண்ணீரிலிருந்து இப்முறையைக்கையாளுவதால் 150 பௌண்டு நீராவிகிடைக்கிறது. ஒரு நிமிஷத்தில் 1400 காலன் தண்ணீர் இறைக்கக்கூடிய இன்ஜின் இந்த நீராவியினால் ஓட்டப்படுகிறது.

மற்றோர் இன்ஜின்

கலிபோர்னியாவில் மற்றொரு இன்ஜின் இருக்கிறது. அது நிமிஷத்துக்கு 3000 காலன் தண்ணீர் இறைக்கக்கூடியதாயிருக்கிறது.

தேன் கூட்டைப்போன்று சிரு அறைகள் கொண்ட தட்டையான பெட்டிகள் வாளமாக அமைக்கப் பட்டிருக்கின்றன; சிரு அறைகள் கண்ணாடியால் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

பெட்டிகளின் இரு மருங்கிலும் தட்டையான முகம் பார்க்கும் கண்ணாடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

இக் கண்ணாடிகளின்மே மல்விழுகிற சூரிய கிரணங்கள் ஒரே முகமாய் தண்ணீரின் மேல்விழும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு பெட்டியிலும் இரு குழாய்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்றின் வழியாக குளிர்ந்த தண்ணீர் வந்துகொண்டும் மற்றொன்றின் வழியாக நீராவி சென்று கொண்டுமிருக்கும்.
இந்த நீராவியைக் கொண்டு பம்பிங் வேலை நடைபெறும்.

ஒளியில் மின்சாரம்.

ஜெர்மனியிலுள்ள வில்ஹெம் இன்ஸ்டிடுயூட்டில் டாக்டர் லான்ஜ் ஒளிபட்டவுடன் மின்சாரத்தை வெளிப்படுத்த ஒருவித வஸ்துவைக்கொண்டு சூரிய கிரணத்தால் இதைவிட அபூர்வமான வேலைகள் செய்து வருகிறார்.

வெள்ளி, செலினியம் ஆகியஇரு லோகங்களையும் சேர்த்து ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய அவ்வளவு மெல்லிய தகடுகளால் ஆகிய செல்களை அமைத்திருக்கிறார்.

இந்தச் செல்களில் உள்ள தகடுகளின்மீது சூரிய ஒளி பட்டவுடன் மின்சாரம் கிடைக்கிறது.

கவ்டமான பிரச்சினை.

கேள்வி, விடை.

(சித்திர புத்திரன்)

மதங்கள் யாரால் உண்டாக்கப்பட்டவை.

ஆஸ்திகன்:- மதங்கள் கடவுள்களால் உண்டாக்கப்பட்டனவை.

பகுத்தறிவு வாதி:- அல்ல அவை மனிதர்களால் உண்டாக்கியனவை.

ஆ-ன்:- ஏன் அப்படிச் சொல்லுகிறாய்

ப-தி:- மதங்கள் எத்தனை உண்டு?

ஆ-ன்:- பல மதங்கள் உண்டு.

ப-தி:- உதாரணமாக சிலது சொல்லும்.

ஆ.ன்:- எடுத்துக் காட்டாக, இந்து மதம், புத்த மதம், கிறிஸ்து மதம், முகமதுமதம், சீக்மதம், பார்சி மதம், ஜொராஷ்ட்டிர மதம், முதலியவைகளும் இவற்றுள் பல உட்பிரிவுகளும் உண்டு.

ப்-தி:- கடவுள்கள் எத்தனை உண்டு?

ஆ-ன்:- ஒரே கடவுள் தான் உண்டு.

இந்தமாதிரி செய்யப்பட்ட செல்வாள் மின்சாரம் பெற முடியாதென்று சொல்வதற்கில்லை. ஆனால் முன்னே சொல்லப்பட்ட இன்ஜின்களைப்போல் தண்ணீர் இறைக்கும் இன்ஜின்கள் இந்த முறையில் ஓட்டப்பட வேண்டுமானால் அதிகச் செலவாகும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த முறையானது இனிமேல் 100 வருடங்களுக்குப்பின் இருவித பயனையளிக்கும் என ஜூலியன் ஹக்ஸலி தெரிவிக்கிறார்.

அதாவது பொது ஜனசாலைகளுக்கு கூரையாகவும், மின்சாரம் சப்ளை செய்யக்கூடியதாயும் சுகாசபையார் இம்முறையை கையாள்வார்களென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ப-தி:- இவ்வளவு மதங்களும் யாருக்காக உண்டாக்கப்பட்டவை?

ஆன்:-மனித வர்க்கத்துக்காகத்தான்.

ப-தி:- மதத்தால் ஏற்படும் பயன் என்ன?

ஆ-ன்:- மனிதன், கடவுளை அறியவும்,கடவுளுக்கும், தனக்கும் சம்மந்தம் ஏற்படுத்திக் கொள்ளவும், ஆத்ம ஞானம் பெறவும், கடவுள் கருணைக்கு பாத்திரனாகவும் பயன் படுவதாகும்.

ப-தி:- அப்படியானால் ஓர் கடவுள் மனித வர்க்கத்துக்கு இத்தனை மதங்களை ஏறபடுத்துவானேன்?

ஆ-ன்:- அது மிகவும் சிரமமான கேள்வியாக இருக்கிறது. பெரியார்களைக் கண்டு பேசியபிறகு பதில் சொல்லுகிறேன்.

மத விபரம்.

ப-தி:- அதுதான் போகட்டும் இந்து மதம் என்பது என்ன? அது கடவுளால் எப்படி ஏற்படுத்தப்பட்டது?

ஆ-ன்:- ஹிந்து மதம் என்றால் வேத மதம் என்று பெயர்.

ப-தி:- வேதம் என்றால் என்ன?

ஆ-ன்:-ருக்கு, ஏஜசு, சாமம், அதர்வணம் என 4 வேதம் உண்டு. ஆவ்வேத முறை தான் ஹிந்து மதம் என்பது.

ப-தி:- இவ்வேதங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டவை?

ஆ-ன்:- வேதம் கடவுளால் ஏற்படுத்தப் பட்டவை.

ப-தி:-வேதம் கடவுளால் ஏற் படுத்தட்பட்டவை என்று யார் சொன்னார்கள்?

ஆன்:- வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை என்று வேதம் சொல்லுகிறது. வேதம் கடவுள் வாக்கு என்று வேதம் சொல்லுகிறது.

ப-தி:- இதற்கு ஏதாவது சாட்சியோ ஆதாரமோ உண்டா?

ஆ-ன்:- வேதத்துக்கும், கடவுள வாக்குக்கும் ஆதாரமோ, சாட்சியோ கேட்பது என்றால் அது பாவமான காரியமே யாகும்.

ப-தி:- அது பாவமாக இருக்கலாம். ஆனால் ஆதாரம் ருஜு இல்லாமல் ஒன்றை ஒருவன் நம்புவது என்றால் அது குற்றமாகாதா?

ஆ-ன்:- இதுவும் கஷ்டமானபிரச்சினையாகத்தான் இருக்கிறது. பெரியவர்களைக் கேட்டுப்பார்க்க வேண்டும்.

சரி புத்த மதம் என்றால் என்ன?

ஆ-ன்:- புத்தமதம் என்பது புத்தர் என்கிறவருடைய கொள்கை.

ப-தி:- அது யாரால் ஏற்பட்டது?

ஆ-ன்:- புத்தர் என்கிறவர் காலத்தில் ஏற்பட்டது.

ப-தி:- அதற்கு என்ன ஆதாரம்?

ஆ-ன்:- புத்தர் என்கிறவர் சொன்னதாக சொல்லப்படும் வாக்குமூல் தான்.

ப. தி:- புத்தர்தான் சொன்னார் என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆ-ன்:- புத்தர் சங்கதி சரித்திரத்தில் பட்டதாய் இருக்கிறது. அன்றியும் அதில் இன்றைய நிலையில் மற்ற மதங்களைப் போல் கடவுள், கடவுள்வாக்கு, பல அற்புதங்கள் முதலியவை இல்லை என்பதோடு ஆலோசனைக்கும், அறிவுக்கும் பொருத்தமானதை எடுத்துக்கொண்டு, மற்றவைகளைத் தள்ளிவிடுவதில் பாவமோ, குற்றமோ, கடவுள் தண்டனையோ இல்லை ஆகையால் அதற்கு ஆதாரம் தேடிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

ப-தி:- சரி மொம்ப நல்லமாதிரி சமாதானம் சொன்னீர்கள். அப்படியானால் அம்மதத்தைப்பற்றி நமக்குக் கவலை இல்லை.

ப-தி:- கிறிஸ்து மதம் என்பது என்ன?

ஆ-ன்:- கிறிஸ்த்தவ மதம் என்பது கிருஸ்துவால் சொல்லப்பட்ட கொள்கை

ப-தி:- அது எது?

ஆ-ன்:- பைபிள்.

ட-தி.- கிறிஸ்து என்பவர் யார்?

ஆ-ன்:- கிரிஸ்து கடவுள் குமார்.

ப-தி:- அப்படி என்று யார் சொன்னார்?

ஆ-ன்:- கிறிஸ்து சொல்லி இருக்கிறார்.

ப-தி:- ஒருவர் தன்னை இன்னான் என்று ரூபிக்க அவரது வாக்குமூலமே போதுமா?

ஆ-ன்:- என் போதாது?

ப-தி:- அப்படியானால் இப்போது ஒருவன் வந்து உம்மிடம் நான் தான் கடவுள் என்று சொன்னால் ஒப்புக்கொள்ளுவீரா?

ஆ-ன்:- இதுவும் கஷ்டமானபிரச்சினைதான், பெரியவர்களைக் கேழ்க்கவேண்டும்.

முகம்மதிய மதம்.

ப-தி:- முகமதியமதம் என்றால் என்ன?

ஆ-ன்;- முகம்மதுநபி என்பவரால் சொல்லப்பட்ட கொள்கைகளை உடையது.

ப-தி:- அதற்கு என்ன ஆதாரம்?

ஆ-ன்:- குரான் என்னும்வாக்கியம்.

ப-தி:- அதுயாரால் சொல்லப்பட்டது?

ஆ-ன்:- கடவுளால் மகமதுநபி அவர்கள் மூலம் வெளியாக்கப்பட்டது.

ப-தி:- அப்படி என்று யார் சொன்னார்?

ஆ-ன்:- நபி அவர்கள் சொன்னார்.

ப-தி:-அப்படி என்று யார் சொன்னார்?

ஆ-ன்:- குரான் வாக்கியங்களில் இருக்கிறதுடன், வேறு பல சாக்ஷியங்களுமிருக்கின்றன.

ப-தி:- வேறுபல சாக்ஷியங்கள் என்பது எவை.

ஆ-ன்:- அந்தக்காலத்தில் நபிஅவர்களுடன் இருந்த பல பெரியவர்கள் வாக்கு இருக்கிறது.

ப-தி:- அவை உண்மை என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆ-ன்:- அந்தப்படி இருக்கும் ஆதாரங்களை நம்பவேண்டியதுதான்.

ப-தி. மற்ற மதங்களும் இதுபோல் தானே?

ஆ-ன்:- ஆம்.

ப-தி அனேகமான கடவுள் வாக்கு, கடவுளால் அனுப்பப்பட்டவர்கள், கடவுள் அவதாரங்கள், என்பவர்கள், அவர்களது வாக்குகள், சம்மந்தப்பட்ட மதங்களின் தத்துவம்.

பலவித கடவுள் தன்மை பெற்றவர்கள் ஆகிய எல்லோரையும், ஒரே கடவுள் சொன்னார், சிருஷ்டித்தார் என்பதும் நியாயமாகுமா? ஆதலால் இம்மாதிரி மதம் என்பதுவியாபாரம் மத சாத்தர், வேதம், புராணம் என்பவைகள் வியாபாரச் சாக்குகள் என்பது பகுத்தறிவுக் காரர்களுக்கும் படும் விஷயம். இது ஒருசமயம் தப்பாக இருந்தாலும் இருக்கலாம்.

ஆ-ன்,- ஆம். எல்லாம் இப்படிப்பட்டதுதான்.

ப-தி-அப்படியிருக்க இவ்வளவு மதங்களையும் ஒரே கடவுள் உண்டாக்கி இருப்பார் என்று நீரே நம்புகிறீரா? அதனால்தான் இவைகள் ஒவ்வொரு சீர்திருத்தக்காரர்களால், அறிவாளிகளால் முன்பின் ஆராய்ந்து பார்த்து மனித சமூகத்துக்கு நன்மை செய்யவேண்டும் என்ற கவலை கொண்டவர்களால் (மனிதர்களால்) உண்டாக்கப்பட்டது என்று எண்ணவேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாமல் ஒரேகடவுள இருந்து அவரே இவ்வளவு மதத்துக்கும், மத கர்த்தருக்கும் ஆதாரபுருஷர் என்றால் அப்போது கடவுளின் மேன்மைக் குணம் பாதிக்கப்படவில்லையா? யாரோசில மனிதர்களுக்கு மேன்மை கொடுப்பதற்காக கடவுளை மூட்டாளாக்குவதும பல கடவுள்களைச் சிருஷ்டிப்பதும் பல வேதங்களை சிருஷ்டிப்பதும் சரியா?

நாம் இருவரும் இவ்விஷயங்களில் ஒரே கருத்துடையவர்களாகி இவைகள் எல்லாம் சற்று நேரத்துக்கு உண்மை என்றே ஒப்புக் கொள்வோம், அதாவது, இந்து மதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பதையும், வேதம் கடவுள் வாக்குஎன்பதையும், கிறிஸ்து கடவுள் அவதாரம் என்பதையும், முகம்மது நபி கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதையும், குரானையும் மற்ற மதத்தையும் ஒப்புக்கொள்வோம் ஆனால் அவைகள் எல்லாம் இன்று ஒன்றாய் இல்லாமல் வேறு அபிப்பிராயங்களாகவும் சில மூடாணாவைகளாகவும் ஒரு மதத்துக்கும், ஒரு மத தத்துவத்துக்கும், மற்றமத தத்துவத்துக்கும், மற்ற தலைவருக்கும் மாறாக இருப்பானேன்? ஒன்றுக் கொன்று இன்றைய அனுபவத்தில் அதிர்ப்தி, வெறுப்பு, துவேஷம் உடையவைகளாக இருப்பானேன்?

ஆ-ன்:- இதுவும் சிரமமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. பெரியவர்களைக் கேட்கவேண்டும்.

ப-தி:- சாவகாசமாய் பெரியவர்களைக் கேட்டு தெரிந்து கொள்ளலாம். ஆனால் இன்று நாம் எதை நம்பி எப்படி நடந்து கொள்வது?

ஆ-ன்:- இவைகள் எல்லாம் உண்மை என்றோ, அல்லது உண்மை அல்ல என்றோ எப்படியோ இருக்கட்டும். அதற்காக நாம் கவலைப்பட வேண்டாம். உலகில் மனிதன் உயிருள்ளவரை நல்லது எண்ணு, நல்லது செய் அவ்வளவு தான்.

ப-தி:- நல்லது எது? தீயது எது என்பதற்கு அளவு கருவி என்ன?

ஆன்:- இது மிகவும் கஷ்டமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. ஆனாலும் பெரியவர்கள் நடந்து காட்டியது, சொல்லி இருப்பது இவைகளைக் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டியதுதான்:-

ப-தி:- பெரியவர் யார் என்பதற்கு அளவு கருவி என்ன? ஒருவர் ஒருவரை பெரியவர் என்றால் மற்றொருவர் அவரை ஒப்புக்கொள்வதில்லை. அவருக்கு மாறாக அல்லது வேறொன்றைச் சொன்னவர்களை பெரியவர் என்கிறான். இதற்கு ஒரு பரீக்ஷை குறிப்பு வேண்டுமே?

ஆ-ன்:- இதுவும் கடினமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. இதற்கெல்லாம் உம்முடைய சமாதானம்தான் என்ன சொல்லும் பார்ப்போம்.

ப-தி:- என் சமாதானம் என்ன? நான்தான் மதத்துவேஷி, பார்ப்பனத் துவேஷி, நாஸ்திகன், சுயமரியாதைக்காரர்கள் என்றெல்லாம் பெயர் வாங்கினவனாய் விட்டேனே, என்பேச்சை யார்கேட்பார்கள். நீர் ஆஸ்திகராயிற்றே உமக்கு தெரியுமென்றும், தெரியாவிட்டாலும் உம்முடைய உள்ளத்தில் சதா குடிகொண்டிருக்கிற கடவுள் உணர்த்துவார் என்றும் கருதி உண்மையான சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்ளுவதற்காகக் கேட்டேன். நல்ல வேளையாக நீர் பதில் சொல்லாவிட்டாலும் என்னை லக்ஷியாமல் பெரியவர்களைக் கேட்டுச் சொல்லுகிறேன் என்று சொன்னீரே அதுவே எனக்கு மிகவும் திருப்தி. ஆஸ்திகர்களில் இப்படிப்பட்டவர்கள் அருமை; மிக அருமை. சந்தேகம் கேட்டால் அடி, உதை, நாஸ்திகன், பிராமண துவேஷி, ஆரிய துவேஷி.....என்றெல்லாம் வெறிபிடித்தவர்கள் போல் ஆடுவார்கள். ஆதலால் உம்மைபற்றிக்கூட எனக்கு சந்தேகம்தான்.

ஆ-ன்:- என்ன சந்தேகம்?

ப-தி:-நீர் ஆஸ்திகரோ என்னமோ என்று.

சுதந்திர மெங்கே.

(பொன்னார்டு ஷா)

இன்று சுதந்திரத்தைப் பற்றிய பழைய முட்டாள் தனத்தை உங்களுக்குச் சொல்ல வரவில்லை. நடைமுறை விஷயத்தைப் பற்றிப் பார்ப்போம்.

பரிபூரண சுதந்திரம் பெற்றவன் என்றால் என்ன? தான் விரும்பியதை, விரும்பிய விடத்தில், விரும்பிய பொழுது, எப்படி செய்ய நினைக்கிறானோ அவ்வாறு செய்யும் உரிமை பெற்றிருப்பதன்றோ உண்மை சுதந்திரம்? அவ்வாறு உரிமை பெற்றவன் எவனேனு மிருக்கின்றானா? இருக்க முடியுமா?

ஆ:-ன் நான் உண்மையில் ஆஸ்திகன் அதாவது ஒரு கடவுள் இருப்பார் என்று நம்புகிறவன்.

ஆனால் இத்தனை மதங்களையும், மதகர்த்தாக்களையும் அந்தந்த மத வேதங்களையும் அவையெல்லாம் கடவுளால் சொல்லப்பட்டவை என்பதிலும் அவ்வேதக்கதைகள் புராணங்கள் ஆகியவை உண்மை என்பவைகளையும்பற்றி அவநம்பிக்கை கொண்டவன் தான்.

ப-தி:- அப்படியானால் நீர் இருப்பர் என்ற கடவுள் நம்பிக்கையை யார் எந்த ஆஸ்திகர் லட்சியம் செய்வார். ஒரு குறிப்பிட்ட கடவுள், அல்லது ஒரு குறிப்பிட்ட மதகர்த்தர், அல்லது ஒரு குறிப்பிட்ட மதம் என்பவைகளை ஏற்றுக்கொளாதவர் நம்பாதவர் எல்லோரும்மற்ற மதக்காரனுக்கு நாஸ்திகனே— நம்பிக்கை யற்றவனே யாவான். நாஸ்திகம் என்பதும் நம்பிக்கை யற்றது என்பதாக எல்லா ஆஸ்திகர்களுக்கு ஓரே பொருள் தான்.

ஆ-ன்:- யாரோ எப்படியோ போகட்டும் எனக்கென்ன என் புத்திக்கு சரி என்று பட்டதை செய்து விட்டு செத்துப் போகிறேன்.

ப-தி:- ஏன் சாகிறீர். உயிருடன் தான் இருமே உமக்கு சரி என்று படாததைத் தான் செய்யுமே. எனக்கென்ன கவலை? எப்படி இருந்தாலும ஆஸ்திகர்கள் வைது கொண்டுதானிருப்பார்கள்.

நாம் விரும்பினாலும் சரி, இல்லையானாலும் சரி நமது காலத்தில் மூன்றிலொன்றை தூக்கத்தில் செலவழித்து விடுகிறோம். மற்றப்படி நீர் மூழ்குவது, ஆடைதரிப்பது, ஆடைகளை அகற்றுவது முதலியவற்றிலும் நேரத்தைப் போக்குகிறோம். பிறகு இரண்டு மூன்று மணி நேரத்தை சாப்பிடுவதிலும் குடிப்பதிலும் தொலைக்கிறோம். அப்பால் அங்குமிங்கும் அலைவதில் ஒரு சில மணி நேரத்தைக் கழிக்கிறோம். பெரும்பான்மையும் பாதி நாள் நம்மால் அகற்ற முடியாத தேவைகட்கு நம்மை அடிமைப் படித்திக் கொள்ளுகிறோம். இந்த அடிமைத்தனம் நாம் பெரிய அரசர்களாயிருந்தாலும் சரி, வெறும் தொழிலாளிகளாயிருந்தாலும் சரி, நம்மை விட்டு அகலுவதில்லை. இனி மனைவிகளாயிருப்போர் குழந்தை பெறும் அடிமைத்தனமொன்றுக்கு நிச்சயமாக ஆளாகிவிட வேண்டும்.

இவற்றை யெல்லாம் இயற்கையான அடிமைத்தனங்கள் என்று வைத்துக்கொண்டால், செயற்கையான அடிமைத்தனங்கள் வேறு பல விருக்கின்றன. நாம் உண்ணாமலிருக்க முடியாது. உண்ணுவதற்கு உணவு சம்பாதிக்க வேண்டும். தூங்குவதற்கு படுக்கை வேண்டும் தூக்கம் சுகமாயிருக்க வேண்டுமானால் தணல் (கணப்பு) தேவை. தெருக்களில் நடமாட வேண்டுமானால் ஆடைகள் அவசியம். இத்தியாதிப் பொருட்களில் வீடு, ஆடை, உணவு எல்லாம் மனிதனால் செய்ய முடியும். ஆனால் செய்வது எல்லோருமல்ல. ஒருவன் செய்கிறான்; மற்றொருவன் பிடுங்கிக்கொள்கிறான. உங்கட்குத் தேன் வேண்டும் போது தேனீக்களை உழைக்க ஏவுகிறீர்கள். அவை தேனைச் சேகரித்தானதும், நீங்கள் சென்று திருடிக் கொள்கிறீர்கள். அங்குமிங்கும் நடமாடி சோம்பியிருந்தீர்களானால், உடன் ஒரு குதிரையை அடிமையாக்கிக் கொள்கிறீர்கள். குதிரைக்கும் தேனீக்கும் என்ன செய்கிறோமோ அதனைபே ஒரு மனிதனுக்கும், பெண்ணுக்கும், குழந்தைக்கும் செய்கிறோம். அவர்கள்மேல் நமக்கு அதிகாரம் செலுத்த முடியுமானால் எத்தகைய ஏமாற்றுக்கும் வஞ்சகத்திற்கும் நாம் அஞ்சுவதில்லை. ஒருகால் நமதிடம சக்தி குறைவாகப்போய் விட்டதென்றால் உடன் மதத்தைத் துணைகொண்டு அவர்கள் நமக்காக உழைக்க வேண்டுவது மதக்கட்டளை என்று தத்துவம் பேச ஆரம்பித்து விடுகிறோம். ஆகவே எச்சரிக்கையாக

ருங்கள்! எந்த மனிதனாவது உங்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும்படியாக விட்டு விட்டீர்களானால் இயற்கைக்கு அவர்கள் எவ்வளவு அடிமைப்பட்டிருக்கிறார்களோ அவ்வளவு உங்களை அடிமையாக்கிக் கொள்வார்கள். அப்போது நீங்களும் உங்கள் மனைவியரும் தினசரி எட்டு முதல் பதினாலு மணிவரை கடுமையாக உழைக்க வேண்டிவரும்; உங்கள் குடும்பத்திற்காகப் பாடுபட அதில் பாதிநேரம்கூட பெறமாட்டீர்கள்.

இவ்வாறு நீங்கள் பெரும்பாரம் தாங்கும் நிலைமைக்கு வராமற் காப்பாற்றுவதே நேர்மையான ஒரு சர்க்காரின் உத்தேசம். ஆனால் பெரும் பான்மையான சர்க்கார்களின் எண்ணம் எதிரிடையானது என்பது வெளிப்படை. அவைகள் அடிமைத்தனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு அதனை சுயேச்சையென்று கூறுகின்றன. அத்தகைய சர்க்கார்கள் எஜமானர்கள் என்போரை ஏழைகளைச் சுற்றிலும் ஒரு எல்லைக்குள் சுழலவிட்டுக்கொண்டு அடிமைத் தனத்தை ஒழுங்கு பண்ணுகின்றார்கள்.

ஏழைகளை கொத்தடிமைகளாக வைத்துக்கொண்டால் சாப்பாடு போடுதல், பாதுகாத்தல் போன்ற பெரிய செலவுகள் உண்டாகிவிடும். ஆதலால் அதனை விட்டுவிட்டு, அடிமைகட்கு சுதந்திரம் கொடுத்து விட்டதாகப் பெயர் பண்ணிக் கொண்டு ஒரு சில குறிப்பிட்ட மனிதர்களின் அடிமைகளாயிருக்கும்படி அவ் ஏழைகளை விட்டு விடுகிறார்கள். இதற்கு அடிமைகளின் வெற்றியென்று பெயர் சூட்டுகிறார்கள்.

இயற்கையின் இரக்கம்.

இனி இயற்கைக்கு மனிதன் அடிமைப்பட்டிருப்பதையும், மனிதனுக்கு மனிதன் அடிமைப் பட்டிருப்பதையும் பற்றி சிறிது சிந்திப்போம்.

இயற்கை, உணவுக்கும் பானத்துக்கும் நம்மை அடிமையாக்கிக் கொண்டது என்றால், உண்பதும் குடிப்பதும் நமக்கு இன்பத்தைக் கொடுப்பதாகவே இருக்கின்றன. நமக்கு அதிகமாகக் கிடைக்கும்போது அதிகமாக குடிக்கிறோம.

நாம் தூங்காவிட்டால் புத்தி கலங்கிவிடும். தூக்கத்தில் நாம் அனுபவிக்கும இன்பம் பெரிது. கண்ணில் தூங்குவது

மீக மிக இன்பமாகத் தோற்றுவதால் வாலிபர்கள் மணம் செய்து நிரம்ப சுகத்தை அடைந்து கொள்கிறார்கள்.

இங்ஙனம் இயற்கைக்கு நாம் அடிமைப்பட்டிருப்பதை எண்ணி வருந்த வேண்டியிருக்க, அவ்வியற்கைத் தேவைகளைச் சாதித்துக் கொள்வதால் இன்பம் கிடைப்பதை யுத்தேசித்து அவ்வடிமைத் தனத்தில் திருப்தி யடைகிறோம். அதன் பயனாக உணர்ச்சிக் கீதங்கள் வாயப்படுகின்றன.

ஆனால் மனிதனுக்கு மனிதன் அடிமையாகவிருப்பதை நினைப்பதே கொடுமை. அவ்வடிமைத்தனம் உடம்புக்கும் உணர்ச்சிக்கும் வெறுப்பை யுண்டுபண்ணுவதாகும். நமது புலவர்களெல்லாம் அத்தகைய அடிமைத்தனத்தைப் புகழ்ந்து பாடுவதில்லை. அதற்கு மாறாக ஒரு மனிதன் மற்றொரு மனிதனை அடிமையாக வைத்துக்கொள்வது போல் கொடுமையில்லை என்றே சொல்கின்றனர்.

சமீபத்தில் அவ்வாறு சொல்லிய ஒரு யூக தீர்க்கதரிசி மார்க்ஸ் என்பவராவர். அவர் வாழ்க்கை முழுதும் மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவதை எவ்விதத்திலேனும் ஒழிக்க வேண்டுமென்று போதிப்பதிலேயே கழித்தார். அத்தகைய அடிமைக் கொடுமையால் எவ்வளவுதீனமான உள்நாட்டுக்கலகம் கடைபெற்றுக் கொண்டிருக்கிறது! வர்த்தகச்சங்கங்கள், தொழிலாளிகள் கழகங்களெல்லாம் போர்கழகங்கள் அன்றோ?

சமீபத்தில் குருஸ்தானம் பெற்ற செயிண்ட் தாமஸ்மோர் "ஒவ்வொருவனும் அவனவனுக்கு வேண்டியதை அவனவன் கையினால் செய்து பிறருக்குத் தொல்லை விளைவியாமலிருக்கும் காலம் வருவது வரையிலும், சமாதானமாக வாழும் ஒரு சமூகம் ஏற்படாது" என்று கூறிக்கொண்டே இருந்தார்.

எஜமானர் வகுப்பு.

எஜமானர் வகுப்புகள் தமது பார்லிமெண்டுகளாலும், பாடசாலைகளாலும், செய்தித் தாழ்களாலும் இயன்ற அளவு பாடுபட்டு, நம்மை நம் அடிமைத் தனத்தை உணர்ந்து கொள்ள முடியாதபடி மருட்டுகின்றன. குழந்தைப் பருவம் முதல் நமது தேசம் சுதந்திரர்களின் நாடு என்று பயிற்றப்படுவதோடு, நமது மூதாதையர்கள் ஜான் அரசனை ஒரு

ஒப்பந்தத்தில் கையெழுத்திட வற்புறுத்தி சுதந்திரத்தை நாட்டினார்கள்; ஸ்பானிஷ் அர்மேடாவைத் தோற்கடித்து சுயேச்சையை நிலைநாட்டினார்கள்; வில்லியம் அரசனை உரிமை மசோதாவை ஒப்புக்கொள்ளுப்படி வற்புறுத்தி சுயேச்சையை நிறுவினார்கள்; அமெரிக்கன் விடுதலையைப் பிரகடனம் செய்து சுதந்திரத்தை நிழற்றினார்கள் என்று நூற்றுக் கணக்காகப் பாடம் போதிக்கப்பட்டு விடுகிறோம்.

எப்பொழுதேனும் நமது சுதந்திரமின்மையை யெடுத்துக் கூறி முணுமுணுத்தால் நமது செயலுக்கெல்லாம் கர்மமே காரணம் என்று காட்டப்பட்டு நமது ஓட்டுரிமை நினைப்பூட்டப் படுகிறோம். "இந்த ஓட்டுரிமையால் என்ன பிரயோஜனம்?" என்று மீண்டும் கேட்டுவிட்டால் "உங்கட்கு தொழிற்சாலை சட்டமிருக்கிறது, சம்பள போர்டுகளிருக்கின்றன, இலவசப் படிப்பு இருக்கிறது" என்று எத்தனையோ சட்டங்களும் கமிட்டிகளும் நம் கண் முன் கொண்டுவரப் படுகின்றன. அப்பால் பணக்காரர்கள் அவர்களுடைய வருமானத்தில் கற்பாகம் அல்லது மேற் பகுதியை செலுத்துகிறார்கள் என்று நாம் போதிக்கப்படுகிறோம். அந்த வேளையில் ஏழைகள்—தாம் குடியிருக்கும் வீட்டு வாடகைக்கு உழைக்கப் போதுமான அவகாசம்கூட இல்லாதிருப்பவர்கள்—வரி கட்டுவதற்காக எவ்வளவு தூரம் உழைக்க வேண்டியிருக்கிறதென்பது கருதப்படுவதில்லை.

இதனை யெல்லாம் எப்பொழுதேனும் பெரிய நூலாசிரியர்கள் எடுத்துக்கூறினால்— உதாரணமாக பதினெட்டாவது நூற்றாண்டில் வால்டேர், ரூசோ, டாம்பெய்ன் முதலியோரையும் பத்தொன்பதாவது நூற்றாண்டில் காபட், ஷெல்லி, கார்ல் மார்க்ஸ், லாசெல் முதலியோரையும் இருபதாவது நூற்றாண்டில் லெனின், டிராட்ஸ்கி முதலியோரையும் சொல்லலாம்—இவ்வாறு எவரேனும் உலகின் உண்மை நிலைமையை எடுத்துச்சொன்னால், உடன் அவர்கள் நாஸ்திகர்கள், காமுகர்கள், கொலை பாதகர்கள், போக்கிரிகள் என்று சொல்லப்பட்டு விடுகிறார்கள். சிலகால் அவர்களது புத்தகங்களை வாங்குவதும் விற்பனை செய்வதும்கூட தண்டனைக்குரிய குற்றம் என்று கருதப்படுகிறது.

அந்த நூலாசிரியர்களின் சிஷ்யர்கள் ஒரு புரட்சியை உற்பத்தி செய்தால் உடன் இங்கிலாந்து அப்புரட்சிக்காரர்கள் மேல் படையெடுத்துச் செல்கிறது. அல்லது அவர்களை

னைழய அடிமை நிலைக்குக்கொண்டுவரப்பணம் செலவிடவோ, அவர்களுடன் போராடுவோருக்கு உதவி செய்யவோ செய்கிறது. அவ்வாறு முயன்று ஒரு வாட்டர்லூவில் இங்கிலாந்து வெற்றி பெற்றுவிட்டால் "பிரிட்டன் சுதந்திரத்திற்கு ஊற்றொரு வெற்றி" யென்று பிரசாரம் செய்யப்படுகிறது. ஒருகால் புரட்சிக்காரர்கள் வெற்றி பெற்றுவிட்டால் யுத்தம் அடங்கி விடும். 1922-ல் ருஷ்யாவில் அப்படித்தான் நிகழ்ந்தது. அவ்வாறு வெற்றி பெற்றால் மற்றநாடுகள் சும்மா விருப்பதில்லை. திட்டவும் வசைமொழி கூறவும் வெருட்டவும் செய்யும். சின்னாள் புரட்சி நாட்டைபெரிப் ராணுவ கடாக்கி விடும். அப்போது அந்நாட்டுப் புரட்சித் தலைவ்னைப் பயந்துகொண்டு மற்றநாடுகள்–அதாவது அதுகாரும் வசைமாரி பொழிந்து கொண்டிருந்த நாடுகள்–விருந்து கடாத்தும்.

பெரியோர் பூசை.

இதுகாரும் வெளிப்பட்டான இயற்கை தத்துவங்கள் சரித்திர உண்மைகள் ஆகியவற்றையே எடுத்துக் கூறினேன். அதலிருந்து எந்த முடிவையும் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. அப்படி சொல்லுவது வாதத்தைக் கிளப்புவதாகும். உங்களால் பதில் சொல்ல முடியாத வாதத்தைக் கிளப்ப இப்போது எனக்கு மனமில்லை.

எந்த மனிதனும் தன்னை அடிமை பென்று சொல்லிக் கொள்ள விரும்ப வில்லையானாலும், அடிமைத்தனம் ஒரு கெட்ட காரியமல்ல.

அரிஸ்டோட்டல் போன்ற பெரிய மனிதர்கள், ஒருவன் நடபுடலாக ஆடையணிகள் தரித்து, மேலான வாகனங்களில் ஆடம்பரமாக பிரயாணம் செய்து, கிரம்ப பரிவாரங்கள் புனட சூழ்டமாடி, வாய்பேசாது அதறகுப் பதிலாக மணிபடித்து காரியம் செய்யாமல் போனால், ஒரு தேசத்தில் சட்டமோ அமைதியோ சர்க்காரோ நடைபெறாது எனறு சொல்கிறார்கள். இதன் கருத்து குடிஜனங்களின் மனதில் ஒரு மதிப்பை உண்டு பண்ணுவதற்காக ஒருவர் ஆடம்பரக்காரராக்கப்பட வேண்டுமென்பதாகும். அப்படிச் சொல்வதின் அர்த்தம், தோற்றத்துக்கு மயங்குப்படியாக ஒரு சமூகத்தை மாற்றவில்லையானால் சட்டமும் அதிகாரமும் நடைபெறாது எனபதாம். இதற்கு உதாரணம ஓட்டு முறையில் காணலாம.

பத்து ஓட்டர்களிருந்தால் அவர்களில் ஒன்பது பேர் தொழிலாளிகள். என்றாலும் தொழிலாள வகுப்பு அபேக்ஷகர் ஒருவர் வெற்றியடைய வேண்டுமென்றால் நிரம்ப நிரம்பக் கஷ்டம்.

இங்கிலாந்தில் பெண்கட்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டவுடன் அவர்கள் செய்த முதல் காரியம் தொழிலாளர்களின் நன்மைக்காகப் பல வருடங்கள் வேலை செய்து இன்னும் வேலை செய்ய வேண்டுமென்று வந்த பெண் பிரதிநிதிகளைத் தோற்கடித்ததாகும். அப்பால் பட்டம் பதவிபெற்ற ஓர் பணக்காரப் பெண்ணை - அழகிலும் மேம்பட்டவளை — தேர்ந்தெடுத்தார்கள்.

செயற்கைப் பயன்.

இதனை சிலர் மனித இயற்கை என்கின்றார்கள். இக் குணத்தை மாற்ற முடியாது என்றும் சொல்கிறார்கள். ஆனால் மனித இயற்கை அதி சீக்கிரத்தில் மாறிவிடத் தக்கதாகும். எழைகளின் அடிமைத்தனமும் பணக்காரர்களின் அகந்தைக் குணமும் தொட்டிலிலிருக்கும்போதே பயிற்றப்படுகின்றன. சரியான கல்வி போதனை கல்கினால் இரு சாராரின் இருவித குணங்களும் ஒழிந்து போகும்.

இன்று எல்லா பிரசினைகளின் அடியிலுமிருந்து கலக்கிக் கொண்டிருப்பது தேசத்தின் வருமானத்தை எவ்வாறு மேலான வழியில் பங்குபோடலாம் என்பதாகும். ஒரு காடு மோட்டார் கலப்பைகளாலும் ரசாயன உரங்களாலும் பயிர் செய்யப்படலாம்; அல்லது மின்சாரத்தால் வேலை செய்யும் பல தொழிற்சாலைகளால் கிரய்பியிருக்கலாம்; எப்படியானாலும் அதிலிருந்து வரும் வருமானத்தை பெரிய மானேஜர் முதல் சிறிய தொழிலாளி வரையிலும் சுகமாயனுபவிக்கும்படி எவ்வாறு பங்கிடலாம் என்பதே பிரச்சினை.

தற்காலத்து இயந்திர சாலைகள் என்னும் போது, அரசி ஆனின் காலத்தில் 1,000 மனிதர்கள் செய்து வந்த வேலையை இன்று பெரிய இயந்திரங்களால் ஒரு பெண் குழந்தை செய்யக்கூடும் என்னும் போதும் நீங்கள் மனம் பூரித்துவிட வேண்டாம். நாம் ஆயிரக்கணக்கான ஊசிகளையும் ஸ்டீல் பேனாக்களையும் மற்றவற்றையும் உற்பத்தி செய்

கோரமென்பது உண்மைதான். ஆனால் அவற்றை யெல்லாம் அருந்தி பசியைத் தணித்துக்கொள்ள முடியாது.

உழவுத் தொழில் விஷயத்தில் நமக்கு ஆகாயத்தையும் பூமியையும் பயன் படுத்திக்கொள்ளலாம் என்று இறுமாந்திருக்கவும் வேண்டாம். இயற்கைத்தாய்க்கு நம் ரசாயன நிபுணர்கள் செய்யும சூழ்ச்சியைக் கடந்து சமாளித்துக்கொள்ளத் தெரியும்.

நீங்கள் எப்போதும் சுதந்திரர்கள் என்று வாய் வீச்சு வீசி பிதற்றித் திரியவேண்டாம், நீங்கள் கினைத்தபடி எப்போதும் செய்துவிட முடியாது. தினசரி 12 மணி நேரமாவது இயற்கை உங்களைச் சில வேலைகளைச் செய்யத் தூண்டுகிறாள். அந்த வேலைகளைச் செய்யாவிட்டால் உங்களைக் கொன்று விடுவாள். அப்பால் 12 மணி நேரம் உங்கட்குக் கிடைக்கும். அந்த பன்னிரண்டு மணி நேரத்தில் நீங்கள் உழைத்துச் சம்பாதிக்கவோ அல்லது வேறொருவனை உங்கட்காக உழைக்கத் தூண்டவோ செய்யவேண்டும், இல்லையானால் மீண்டும் இயற்கை உங்களைக் கொலை செய்ய வந்துவிடுவாள்.

ஓரு நாகரிக காட்டில் நீங்கள் வாழ்ந்து வந்தால், போலீசார் விதிக்கும் சட்டங்களால் உங்கள் சுயேச்சை கட்டுப்படுத்தப்படும். அவர்கள் இதைத்தான் செய்யலாம், அதைச்செய்யக்கூடாது என்றும், வரி கொடுக்கும்படியும் தொல்லைப்படுத்துவார்கள். அவர்கள் சொல்லுக்கு இணங்காவிடில் நீதி மன்றங்கள் சிறைப்படுத்தி, தண்டித்து, கொலைகூடச் செய்யத் துணியும். சட்டங்களெல்லாம் பாரபட்சமின்றியும் நியாயமாகவும் செலுத்தப்படுமானால் நமக்குக் குற்றம் சொல்ல வழியில்லாது. ஏனெனில் நம்மைப் பாதுகாத்து, வழிப்பறி, கொள்ளைமுதலியவற்றிலிருந்து சட்டங்கள் ரக்ஷிக்கின்றன.

இன்று சமூகம் அமைக்கப்பட்டிருக்கிற மாதிரியிலிருந்து உங்கள் மீது இரு பெரிய நிர்ப்பந்தங்களிருந்து வருகின்றன. அந்த நிர்பந்தங்கள் நிலச்சுவான்தார், வேலைதரும் முதலாளி கொடுமை என்பனவாம். நீங்கள் நிலச்சுவான்தார் மனம் போல நடந்துகொள்ளவோ, அவர் சொல் பவருக்கு ஓட்டுப் போடவோ செய்யாமலிருந்தால், உடன் தன் நிலத்தைவிட்டு வெளியே போகச்சொல்லி விடுவார். வேலைகொடுக்கும் முத

லாளி உங்கள் ஆடையின் நிறம், அளவு முதலியவற்றைக்கூட ஆளுவார். அவர் திட்டத்திலிருந்து சற்று மாறுபட்டுவிட்டால் உடன் வெளியே போகச் சொல்லிவிடுவார். எந்த நிமிஷத்திலும் அவர் உங்களை வெளியே தள்ளிவிடலாம். ஆகையினால் உணர்ச்சி யிழந்து திரியும் வேலையில்லாதார் என்ற கோஷ்டியைச் சேர எப்போதும் நீங்கள் லாயக்கானவர்களாம் அந்த முதலாளிக் கிருக்கும் அதிகாரம் எந்த அரசியல் சர்வாதிகாரிக்கும் கிடையாது. அதற்கேற்ற தற்கால மருந்து, சங்கங்களமைத்தல், வேலை நிறுத்தம் செய்தல் என்பனவே இது உங்களை உங்கள் எதிரியின் வாயிலின் முன் பட்டினி போட்டுக் கொள்ளும் பழைய முறை.

ஆனால் இந்தநாட்டுப் போலீசார் உங்களை முதலாளி வீட்டின் முன் பட்டினியிருக்க விடுபவர்களல்லர். ஆகவே உங்கள் வீட்டுக்குள்ளேயே பட்டினி இருக்கவேண்டியிருக்கிறது. வேலை நிறுத்தமும் ஒரு முட்டாள்தனமே. எல்லா தொழிலாளிகளும் ஒரே காளையில் வேலை நிறுத்தம் செய்து விட்டார்களானால் மனிதப் பூண்டே அழிந்து போகலாம். அப்படி அழிவதாயின் முதலில் தொழிலாளிகள்தாம் அழிவர்.

சுதந்திரமில்லை.

நாம் சுதந்திரமென்கின்ற பேச்சை விட்டுவிடவேண்டும்: இங்கிலாந்தில் மொத்தமாக விடுதலையோ சுதந்திரமோ இருந்ததாகத் தெரியவில்லை.

சுதந்திரம் என்பதனை அதன் பழைய பெயராகிய ஓய்வு என்பதால் அழைக்க. அதிகம் ஓய்வு வேண்டுமென்றும் மிகையானதான வேலை சற்று வேண்டுமென்றும் சொல்லுங்கள்.

அதற்குமுன் "ஆள்கிறது பிரிட்டன், பிரிட்டன் ஆள்கிறது" என்ற பாட்டை நிறுத்துவோம். நாம் உண்மையில் ஆளவில்லை. எந்த பார்லிமெண்டு அங்கத்தினனாவது சுதந்திரத்தைப் பற்றியாவது விடுதலையைப் பற்றியாவது பேசுவானானால் அவனுக்கு ஓட் செய்யாதிருப்போம்.

ஓய்வு எதற்கு?

கடைசியில் நாம் போதுமான அளவு ஓய்வையும் பணத்தையும் பெற்றுக்கொண்டோமென்றிருக்கட்டும். அவற்றைக்

கொண்டு என்ன செய்வது? பணம் பெற்ற பலர் எதிர்ப்பதற்கு மாறாக இன்பத்தையும், ஆரோக்கியத்தையும், இறுதியாக உயிரையும் இழந்து கெட்டுப் போகிறார்களென்று கேட்டிருக்கிறேன். ஓய்வு நேரங்களை எப்படி செலவிட வேண்டுமென்று பயிலாதிருந்தால் ஓய்வு கிடைப்பதால் பயனில்லை. ஆகவே நீங்களே யோசித்து மேற்படி கேள்விக்கு விடை கண்டு பிடித்துக் கொள்ளுமாறு விட்டு விடுகிறேன. சந்தர்ப்பம் கிடைத்தால் தினசரி 8 மணி நேரம் வேலைசெய்து 45-வது வயதில் ஒரு பென்ஷனோடு வேலை விட்டு நீங்கிக்கொள்வீர்களா? அல்லது தினசரி 4 மணி நேரம் விகிதம் வேலை செய்து 70-வது வயது வரையிலும் உத்யோகம் பார்ப்பீர்களா? இதன் விடையை எனக்கு அனுப்பவேண்டாம். உங்கள் மனைவியருடன் பேசிக்கொள்ளுங்கள்.

அரையணாச் செலவில் ஆரோக்கியந் தரும் உணவு.

ஜப்பான் நிபுணரின் ஆராய்ச்சி முடிவு.

ஜப்பான் சரக்குகள் எந்த விதத்திலும் விலை குறைவாக இருக்கின்றன. எவ்வளவு தீர்வை விதித்தாலும், இறக்குமதி குறையக்காணோம். மிகக் குறைந்தசெலவில் பொருள்களைத் தயாரிக்க ஜப்பானியர் எப்படியோ வழிகண்டு பிடித்திருக்கின்றனர். இப்பொழுது ஆகாரப்பொருள்களையும் மிகக் குறைந்த செலவில் தாயாரிக்கஆராய்ச்சி நடைபெற்று ஒரு நல்லபலன் ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன.

டோக்கியோவிலுள்ள ஆகாரஸ்தாபன டைரக்டர், புரபஸர் ஸெய்க்கி என்பவர்தான் இந்த ஆராய்ச்சியை நடத்திவந்தார். அரையணாச் செலவில், போதுமான சக்தியளிக்கும் ஆகாரத்தை அவர் கண்டுபிடித்து விட்டாராம்.

மேற்குறித்த ஸ்தாபனத்தில் வேறு பல விஷயங்களும் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. மனித உடம்பு பலவித உணவு வகைகளால் பாதிக்கப்படும் முறை; சரியான உணவின் மூலம் ஜனன விகிதத்தை அதிகப்படுத்தல், ஒரே மாதிரியான உணவு வகைகளை கவர்ன்மெண்டிலிருந்தே ஜனங்களுக்கு சப்ளை செய்தல் முதலியன.

"இராமாயண காலம்"

(வித்துவான் ஏ. எ ம். குழந்தை.)

இந்துக்கள் என்பார் எல்லோரும் மிகவும் பாராட்டிப் பயின்றுவரும் நூல்களில் முக்கியமானதும், பழமையானதும், இராமாயணமும், பாரதமுமேயாகும். இவைகள் தெய்வ சம்பந்தமுடையதாகவும், கற்போர், கேட்போர், கற்பிப்போர் யாவர்க்கும் இராம கிருஷ்ணாரூள் கிடைப்பதாகவும் கம்பப்பட்டு வருகிறது. தமிழை யொழிந்த எல்லா இந்திய மொழிகளுக்கும் முதநூல்கள், மொழி பெயர்ப்பான இவ்விரு நூல்களேயாம். இவற்றில் பாரதம் ஐந்தாம் வேதமெனப்படினும், விஷ்ணுவின் அவதார மென்னும் இராம கதை கூறுவதால் இராமயணமே பெரிதும் போற்றப்பட்டுவருகிறது. இவ்விராம கதையே தமிழர் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகையால் இராமன் காலத்தை உள்ளபடி ஆராய்ந்தறிவது தமிழ் மக்களுக்கின்றியமையாத தொன்றாகும்,

இராமாயணம் பாடிய வரலாறு.

பிரம சபையில் இராமாவதாரத்தைப்பற்றிப் பேச்சு நடந்தபோது கேட்டுக்கொண்டிருந்த நாரதர் ஓடியாரா, வால்மீகி முனிவர், அப்போதே (இராமன் கருவிலமைவதற்கு முன்பே) 24 ஆயிரங் கிரந்தங்களால் இராமாயணத்தைப்பாடி முடித்தனராம். இதன் ஓவ்வோராயிர சுலோகங்களின் முதற் சுலோகம் ஓவ்வொரு காயத்திரி மந்திராக்ஷரத்தினால் ஆரம்பிக்கப்படுவதால் "காயத்திரி ரூபம்" எனவும், இதற்கு முன் வடமொழியில் கத்திய ரூபமான வேறு நூல்களின்மைபற்றி "ஆதிகாவியம்" எனவும் வழங்கிவருகிறதாம். இது புராண கற்பிதம். இராமாயணத்திற் கூறப்படும் அவ்வளவு நிகழ்ச்சிகளையும், அவை நடப்பதற்கு நெடுநாளைக்கு முன்னமேயே

யாடி முடித்தனரென்பது இயற்கைக்கு விரோதமே. இவ்வளவு நம்பிக்கைக்கும் தெய்வ சம்பந்தமே காரணமாகும்.

உண்மையாவது, இராமனால் கர்ப்பிணி பழிக் காட்டுக் கோட்டப்பட்ட சீதை, வான்மீகி ஆச்சிரமத்தில் தங்கியிருந்தனள். ஆங்குப்பிறந்த குசலவர்க்கு வான்மீகியார் சகல கலைகளையும் கற்பித்தனர். அசுவமேகத்தில் இராமனால் விடப்பட்ட குதிரையைக் குசலவர் பிடித்துக் கட்டினர். இது இராமாயணக் கதை. குதிரையைத் தொடர்ந்து வந்த பல வீரர்களையும் வென்று குதிரையைக்கட்டும் திறமை வாய்ந்த குசலவர்க்கு வயது 12 ஆகிலும் இருந்திருக்கவேண்டும். ஆகவே சீதை, வான்மீகி ஆச்சிரமத்தில் தஞ்சமடைந்தது 12 ஆண்டுகளாவது இருந்திருக்கவேண்டும். இராமன் சீதையைத் தன்னாட்டில் தங்களுக்குச் செல்வாக்குத் தேடிவைத்த நிகழ்ச்சியாதலால் ஆவலுடன் தாம் மூன்பறித்திருந்ததோடு, சீதைபால் முழுதுமுணர்ந்த வான்மீகியார், சீதை ஆங்கிருந்த காலத்தே இராமாயணத்தைப் பாடி முடித்திருக்கலாம். அசுவமேகத்தில் குசலவர் இராமாயணசரிதையைக்கீதமாகப்பாடியிருப்பதும் அதனை வலியுறுத்தும். இராம சரிதை நிகழ்ந்த பின்பே, அதாவது, இராமனிருக்கும்போதே இராமாயணம் பாடப்பட்டதென்பதுவெள்ளிடையாம். இராமன் பிறப்பதற்கு முன்பேபின் னிகழும் அவ்வளவு நிகழ்ச்சிகளையும் அறிந்து பாடினானென்பது, அரிய ரிஷிகள் தெய்வ சம்பந்தமுடையவர் என்பதைக் காட்டவெழுந்த கட்டுக்கதையேயாகும்.

கற்பித காலம்.

இராமன் திரேதாயுகத்தில் இருந்ததாகவும், 11000 ஆண்டுகள் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. சாதாரண மனிதனான தசரதன் 60000 ஆண்டுகள் வாழ்ந்தானென்றவர், விஷ்ணுவின் அவதாரமான இராமன் 11000 ஆண்டுகளே வாழ்ந்தானென்றது அவத்தைவசமேயாம். இதனை,

"என்னே திரேதத்தில் ரேணுகையே கூற்றுவனாம்
தன்னேர் திரேதத்தில் சானகியே—பின் யுகத்தில்

கூடுங் துரோபதையே கூற்றாங் கலியுகத்தில்
வீடுதோறும் பெண்களே யாம்''

என்னும் நீதி வெண்பாவும் வலியுறுத்தும். ரேணுகை தச ரதராமன் காலத்திருந்த பரசுராமன் தாயாதலால், இராமன் திரேதாயுக ஆரம்பத்தில் இருந்தவனாவான். அதாவது இன்றைக்கு $21\frac{1}{2}$ லக்ஷம் ஆண்டுகளுக்கு முன்னிருந்திருக்க வேண்டும். (திரேதாயுகத்தின் முதல் ஓராயிரத்தைத்தள்ளி னும் திரேதா 1295000 + துவாபுரி 864000 × கலி 5000 = 2164000) இவ்வளவு நீண்டகாலச் சரித்திரம் வழுவின்றி இது நாள்வரை ஒரு காட்டிலும் கிடைத்தில்து. மேலும் இராமாய ணத்தில் அகத்தியர், இராமனுக்கு சிவ தீக்ஷையையும், இரா வணனைக் கொல்லுமுபாயத்தையுப் போதித்து திவ்யாஸ்திர மளித்ததாகவும், இடைச்சங்கமிருந்த கபாடபுரத்தைப் பற்றி யும் கூறுகிறது. அகத்தியரைத் தெய்வமுனி பென்னும் கொள்கையுடையார் கணக்குப்படி பார்க்கினும் அகத்தியரும் இடைச்சங்கமும் இருந்து இன்றைக்கு 7560 ஆண்டுகளே யாகின்றன. பல லக்ஷக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் னிருந்த ராமன் அகத்தியரை எப்படிச் சந்தித்திருக்க முடியும்?

உண்மைக் காலம்.

இவ்வளவு நீண்டகாலத்திற்கு முன்னெழுதப்பட்ட இரா மாயணத்தில் கொஞ்சகாலத்திற்கு முன்பிருந்த புத்தரையும், அவர் கொள்கையையும் வான்மீகியார் ஆபாசமாகத்திட்டி எழுதியிருக்கிறார். புத்தபிரான் கொலை மறுத்தருளறம் போதித்ததால் கொலைத்தொழிலை வான்மீகியார் வெறுத் தெழுதியதில் ஆச்சரியமொன்றுமில்லை. ''யதாஹி சௌர; ஸ்யததாஹி புத்த; ததாகதம் காஸ்திகம் மத்ராவித்தி'' அதா வது திருடனும், புத்தனும் ஒப்பாவர். இங்கு ததாகதனே (புத்தனே) நாஸ்திகன் என்று அறியற்பாலது. (வான்மீகி ராமாயணம்) ''புத்த பகவானிடத்தும், அவனைப் பின்பற்றி ஒழுகிவந்த நம் ஆன்றோர்களிடத்தும் பார்ப்பனருக்கிருந்த பொறாமையை இராமாயணத்தினின்றறிபலாம்'' (சுவாமி

சிவானந்த சரஸ்வதி) "எப்படிவா ஒப்புவிக்க இயலாத ஒரு காலத்தில் நடந்ததாகச் சொல்லும் இராமயணத்தில், சரித்திர வரலாற்றுப்படி கணக்கிடப்பட்ட கொஞ்ச காலத்திற்கு முன் னேயிருந்த புத்தருடைய பெடர் வருவதால். புத்தருடைய காலத்திற்குப் பிற்பட்ட நூலே அதுவென்றறியவும்". (ஞான வாசிட்டம்) யோகவாசிட்டமும் இப்படியே சொல்லுகிறது. வான்மீகியார் இராமன் காலத்திலேயே இராமாயணத்தைப் பாடியிருப்பதால் பிற்காலத்தில் இருந்த புத்தரைப்பற்றிக்கூறி யிருக்கமுடியாது. மேலும் இராமன் பிறப்பதற்கு முன்பே பாடியதெனக் கொள்ளப்படுகிறதேயன்றிப் பிற்பட்டதென எங்குங் கூறிப்படவில்லை. ஆகையால், புத்தமதம் வடநாட்டில் பரவிய பின்னரே இராமாயணம் பாடப்பட்டதாகும். புத்தர் போதனையால் மக்கள் கொலைத்தொழிலாய வேள்வியை மறுத்துவரவே, உளுத்துண்டுகளித்த ஆரியரிஷிகள் வயிற்றில் மண் விழுந்தது. அதனால் அவர்கள் புத்தரை நாஸ்திக னெனவும், அவர் கொள்கையை நாஸ்திகக் கொள்கையெனவும் மக்களிடை எதிர்ப்பிரசாரம் செய்துவந்தனர். அதற்காதாரமாக வான்மீகியார் தாமெழுதிய இராமாயணத்தில் எழுதினர். இப்போதும் மதக்காரர்களும், கட்சிக்காரர்களும் தத்தமக்கு விரோதமான மதங்களையும், கட்சிகளையும் பலவாறு நிந்தித்துக்கூறியும், எழுதியும் வருவது இதனை மெய்ப்பிக்கும். மேலும் பொதியமலையிலிருந்த அவலோகிதன் என்னும் பௌத்த முனிவரிடம் அகத்தியர் தமிழ் கற்றார் என்பதுற் புத்தருக்குப்பிறகே ராமன் இருந்தானென்பதை வலியுறுத்தும்.

புத்தர் காலம்.

பண்டைகாலத் தமிழர்கட்கு நாகர் என்று பெயர். அவர்கள் மது, மாமிச உணவைக்கனவிலும் கருதியறியார்கள். அன்னார், ஆரியர்கள் இந்தியாவில் குடிபுகுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே வடநாடு முழுவதும் பரவி வாழ்ந்து வந்தனர். கி. மு. 700-க்கு முன் அந்நாகர்களில் ஒருவரான சிசுநாகன் (இளமையிலரசு செய்தியவன்போலும்) என்பவன் மகத நாட்டை ஸ்தாபித்து ஆண்டுவந்தனன். அவன் சந்ததிக்குச்

'சிசுநாக வமசம' என்று பெயர். சிசுநாக வம்சத்தில் பாதி யான் என்பான் சிறந்தவன்; அவன் புத்தர் பிறந்த வருடம் அரசெய்தி 50 வருடம் ஆண்டனன். சரித்திராசிரியர்கள் கி. மு. 561ல் கபிலவாஸ்துவில் புத்தர் பிறந்ததாகக் கூறுகின் றனர். 1912 அக்டோபரில் வெளியான மகாபோதிச் சங்கத் தார் பிரசுரம் புத்தர். கி.மு.578ல் காசியில் பிறந்ததாகக் கூறுகி றது.சரித்திராசிரியர்கள் கணக்குப்படி பாதியான் கி.மு 567ல் முடிசூடினன். அவன் மகன் பிம்பிசாரன் (16 வயதில்) கி. மு: 537ல் முடிசூடினான். அவன் மகன் காகதாசகன் 517ல் முடிசூடினன். 515ல் காகதாசகன் மந்திரி, சிசுநாகன் என் பான் நாட்டைக் கைப்பற்றினான். புத்தர் பிம்பிசாரன் செய்த யாகத்தைத்தடுத்து அருளாறம் போதித்தது அவன் அரசெய் திய 537ல். அப்போது புத்தருக்கு வயது 30 அதாவது, புத் தர் தம் நாட்டை நீங்கியபோது வயது 29. காடு சென்று 7, 8 மாதங்கள் வரையிலும் பல அறிஞர்களிடம் வாதாடியும் உண் மைவிளக்கம் பெறாமல் தவநிலை எய்தினர். தவத்தில் 3 அல்லது 4 மாதங்கள் தங்கினர், தவநிலைக்கிடையிலே பிம்பி சாரன் யாகத்திற்குச் சென்றிருந்தலான் அப்போது 30 வய திருக்கலாம். மெய்யறிவுற்ற பிம்பிசாரன், அது முதல் தன் னாட்டிலும், மற்ற வட நாடுகளிலும் புத்த மதத்தைப் பரப்பி வந்தான், சுமார் 6, 7 வருடங்களுக்குள் வடநாடு முழுதும் பரவியிருக்கலாம். எவ்வாறெனில், புத்தரும் பல்லாயிரக் கணக்கான சீடர்களைக் கொண்டு போதித்துவந்தார். புத் தர் தந்தையும், பிம்பிசாரனும் அரசர்களானதால் மக்கள் விரைவில் பின்பற்றியிருப்பர். அருளாறமல்லவா? குறைந்தது 10 வருடத்தில் பரவியிருக்குமென்பது நிச்சயம்.

புத்ததன்மத்தால் வேள்வியென்னும் புலைத் தொழி லாகிய கொலைத்தொழில் தடைபட்டது. கொழுக்கக் கொ ழுக்க உண்டுவந்த தங்கள் வாயிலும், வயிற்றிலும் மண் விழுந்ததைக் கண்ட ஆரியரிஷிகள் மனம்புழுங்கி, புத்தரைத் தூற்றி எதிர்ப்பிரசாரம் செய்தனர். மக்கள் செவி சாய்க்க வில்லை. சில சிற்றரசர்களுக்கு வில்வித்தை கற்பித்து வல்ல வராக்கித் தங்கள் செயலை நிலைநாட்ட வேலை செய்தனர்.

அவர்களில் இளவலும், மிக்க பலசாலியும், ஆரிய அடிமையுமான இராமனே சிறந்தவனென்று கண்டனர். அவனுக்குச் சிறந்த விற்பயிற்சியும், ஆரிய பக்தியும் உண்டு பண்ணினர். இராமனும் அவர்கள் எண்ணம்போல் உருப்பட்டான். ஆனால் போரசனாகிய மகத மன்னனையும், மற்ற பௌத்த அரசர்களையும் வெல்ல இராமனால் இயலுமா? அதனால் வடநாட்டில் ஆரியச்சூழ்ச்சி பலிக்கவில்லை. பல்லை வெருவிக்கொண்டு காலந்தள்ளலானது.

வடநாட்டில் தங்கள் கொலைத் தொழிலுக்கிடையூறுண்டாகவே, சில ஆரியரிஷிகள் விந்தமலைபத்தாண்டித் தென்னாடு புக்கு, விந்தமலைச் சாரலில் தங்கி வேள்வி முலம் கொன்று தின்று வந்தனர். அதுகண்ட கொல்லா விரதிகளாகிய தமிழர்கள் அன்னாரை ஆங்கு நின்றுந் துரத்திவந்தனர். மேலும், தசரதன் முதலிய ஆரியவரசர்களால் எதிர்க்குந் தமிழர்களைக்கொன்று தங்கள் செயலை கடத்திவந்தனர். இதுவே இராக்ஷத வதமென்றெழுதப்பட்டது. இங்கே ஆரியவரசனென்றது ஆரியர்க்கடிமையான வடநாட்டரசர்களையேயாம். ஆரியர் என்றும் சேர்முகமாய் ஆட்சி புரிந்ததில்லை. அக்காலில், இலங்கையிலிருந்து தென்னாடு முழுதும் ஒரு குடைக்கீழ் ஒப்ப நாடிச் செங்கோலோச்சி வந்த தமிழர்களின் மாபெருந்தலைவனாகிய இராவணன், விந்த மலைச் சாரலிலுள்ள தண்டகாரணியம் ஜனஸ்தானம் என்னும் எல்லைப்புறப் பகுதிக்கு (மாகாணம்) தாடகை என்னும் பெண்ணரசியைப் பிரதிநிதியாக்கியிருந்தான். தாடகையால் துரத்தப்பட்ட விஸ்வாமித்திரன், இராமனை அழைத்துவந்து மறைவில் வைத்து வேள்வி செய்யத்தாடகை வரவே இராமன் கொன்றனன். யுத்த முறைப்படி சண்டை செய்யாததே மறைமுகமாகும். அப்போது ராமனுக்கு வயது 14, 15 இருக்கலாம். இராமனுக்கு அக்காலில் காமக்குறிப்புத் தோன்றியதாக வான்மீகி குறிக்கவில்லை. வாலிப தசையை அடையவில்லையென்பது தசரதர் வாக்காலும் விளங்குகிறது. மணவினையுமாகவில்லை. 16 வயதே வாலிபத்தோற்ற காலமாகும். கி. மு. 530, 31ல் தாடகை வதம் வடந்திருக்கலாம்.

தாடகை கொல்லப்படவே இராவணன், தன் தம்பியர்களான (மாற்றான் தாயின் மக்கள்) கரதூடணர்களை மந்திரி பிரதானிகளாக 14-ஆயிரம் சேனைகளுடன் தங்கை சூர்ப்பணகையைத் தண்டகாரணியத்திற்குத் தலைவியாக்கினான்.

தாடகையைக் கொன்று சென்ற இராமன், சீதையை மணந்து சாணக்கட்குப் பிறகு, மனைவியுடனும், தம்பி இலக்குமணனுடனும், பல வீரர்களுடனும் சந்தியாசக் கோலத்துடன் தென்னாடுபுக்குத் தண்ட காரணியத்தில் தங்கி மறைமுகமாய் ஆரிய ரிஷிகளுக்கு உதவி வந்தனன். காளைடவில் விந்தமலைச்சாரலில் உள்ள தமிழர்கள் பலரை நட்பாக்கிக் கொண்டனன். இராமாயணப்படியே பார்க்கினும் 13-வருடம் உதவி செய்திருக்கிறான். இராமன் வனவாசம் செய்தது ஆரிய ரிஷிக்குதவிசெய்தற் பொருட்டே. இராவண யுத்தம் காமத்தால் விளைந்ததேயன்றி காடு பிடிப்பதற்கன்று. காடு பிடிக்க நடந்ததெனில், விபீஷணனுக்குப் பிறகாவது தன் தம்பியரிலொருவனையோ, தன் மகனையோ இலங்கைக் கரசனாக்கியிருப்பான். தமிழர்களின் நட்புக்கும் நம்பிக்கைக்குமே சீதையுடன்வந்தான். முடிவில் ஒருநான், தனித்துலாவிய சூர்ப்பணகையைக் கண்டு, காதலுற்ற இராமன் பலவாறு வேண்டியும் அறக்கற்கடைய அத்தமிழரசி மறுக்கவே காமாந்த காரத்தால் கண்ணிழந்த ராமன் சினந்து, மூக்கையும், மூலையையும் அறுத்து மானபங்கம் பண்ணினான். இதைச் சூர்ப்பணகைமீது சாற்றினார் வான்மீகி. பின் மறைந்திருந்த வீரர்களைக் கொண்டு ஆயத்தமில்லாதிருந்த கரதூடணர்களையும் கொன்றான். இது கி. மு. 517-16-ல் நடந்திருக்கலாம். பிம்பிசாரன் துறவெய்திய காலமும் இதுவே.

தங்கையின் மானக்கெட்டைக்கண்ட இராவணன் கொதித்தெழுந்து தண்டகாரணியம் சென்றனன். அப்போது இராம லக்குமணர் சீதையைத் தனித்திருத்தி வெளியே சென்றிருந்ததால், ஆத்திரமடைந்த இராவணன் அவர்களைத்

தொடாமல் தம்மிருப்பிடம் வரிற் புத்தி புகட்டலாமெனத் தமிழர்கள் போர் முறைப்படி, இராமனின் முக்கியப்பொரு ளான சீதையைக் கொண்டு சென்று சிறைவைத்தனன்.

மனைவியை யிழந்த ராமன், தமிழ் வீரனான வாலியை வஞ்சித்துக் கொன்று சகோதரத் துரோகியான சுக்ரீவனை யும், எஜமானத்துரோகியான அநுமானையும் கட்பாக்கிக் கொண்டனன். இராமன் இருந்த இடத்திற்கு கிஷ்கிந்தை வடக்கே இருந்ததால் இது முன்னே கடந்திருக்கலாம். பின், முன்பு தான் கட்பாக்கிக்கொண்ட தமிழர்களோடு தன் சேனை யுடனும் 70 வெள்ளம் வானர வீரருடனும் இலங்கைக்கரை யிற் சென்று தங்கி, அனுமானை அனுப்பினன். அனுமான் இலங்கை சென்று, விபீஷணனைக் கண்டு சேர்த்து, ஆசை காட்டி இராமனிடம் அழைத்து வந்தனன். இராமன் இலங் கைக்கரசனாக்குவதாக உறுதி கூறி வசப்படுத்தினான். தமி ழர்களின் உரிமை நாகரிகம், கலை, தமிழ் மொழி, ஒற்றுமை தமிழர் மாபெருந் தலைவர் குலம் முதலியவற்றை அடியோ டொழித்து, தமிழர்களை ஆரியப் பார்ப்பனருக்கு என்றென் றும் நீங்கா அடிமையுமாக்கிய தேசத்துரோகியும், சகோத ரத் துரோகியும் சுயநலக் கடவுளும், சோடாலிக்காம்புமாகிய அச்சண்டாள விபீஷணப்பாவி, பகைவனாகிய இராமனுடன் சேர்ந்து அந்தோ! அண்ணனைக் கொன்று ஆரியரால் ஆழ் வார்ப்பட்டம் பெற்றனன். இராம—ராவண யுத்தம் கி. மு 513 அல்லது 14-ல் கடந்திருக்கலாம். அப்போது இராம னுக்கு வயது 30. எஜமானத் துரோகியான அநுமானும், சகோதரத் துரோகிகளான சுக்ரீவ-விபீஷணர்களும் இராம னுக்கு உதவி செய்திராதிருந்தால் ஆரியர் தென்னாட்டில் கால் வைத்திருக்கவே முடியாது. இச்சகோதரத் துரோகிகளை, வரதுங்கராம பாண்டியன் மனைவியான வீரத்தமிழ்ப் பெண்ணரசியும், ''செங்கதிரோன் மைந்தனையும் தென்னி லங்கை வேந்தனையும்.....பாராதே'' என்று வெறுத்துக் கூறினர்.

முன், ஆரியர் இந்தியாவுக்கு வராதிருந்தால் ஆங்கி லேயரும் வந்திருக்கமுடியாது. பொல்லாத ஆரிபர்களே மாபெருந் தலைவனைக் கொன்றதோடு நில்லாமல், அரசர் களுக்குள் சண்டையை யுண்டாக்கி ஒன்றுமையைக் குலைத்த காட்டைக் குட்டிச்சுவராக்கி விட்டனர்.

விபீஷணன் கி. மு. 514, 15 – 487 = 27, 26-வருடம் ஆண்டனன். ஏனெனில். புத்தர் நிர்வாண மெய்திய 387-ம் ஆண்டில் மகத நாட்டரசனான விஜயன் என்பான். இலங் கையைக் கைப்பற்றி யாண்டனன். இவன் சிசுநாக வம்சத்து நாகதாசகன் மகனென யூகிக்கின்றனர். இவன் முதல், ஆங்கி லேயரால சென்னையில் சிறைவைக்கப்பட்ட சண்டிராஜன் வரை விஜயன் வம்மிசத்தினரே இலங்கையை யாண்டுவர் தனர. இவ்விஜயன், இலங்கையிலும் ஜாவா முதலிய தீவு களிலும் புத்த தன்மத்தைப் பாப்பி வந்தான். கி. மு 6-ல் தோன்றிய புத்ததன்மம் கி. பி. 7, 8 வரை 1200 வருடம் இந் தியாவேயன்றி, பர்மா, சீனா, மலேயா, ஜாவா முதலிய தீவு கள், இலங்கை முதலிய இடங்களில் அருளறம் போதித்து வந்தது. தரோகியான விபீஷணனுக்கு ஆண் சந்ததியின்மை

ஆரியரின் கொள்கை-இயல்பு என்பதை; கி.பி, 7, 8 நூற்றாண்டுகளில் இருந்தசைவ சமயாசாரிகளையும், வைணவ ஆழ்வார்களையும் 5000 ஆண்டுகளுக்கு முன்னிருந்ததாகவும், கி. பி. 9ம் நூற்றாண்டிலிருந்த மாணிக்கவாசகரை திரேதாயுக ஆரம்பத்தில் இருந்ததாகவும் கூறுவதே உறுதிப்படுத்தும்.

இங்ஙனம், கி. மு. 6-ம் நூற்றாண்டிலிருந்த ஒரு சிற்றரசனான இராமனை, தங்களுக்குதவி செய்ததற்காக ஆரியப் பார்ப்பனர்கள், சக்கரவர்த்தி திருக்குமாரனென்றும், விஷ்ணுவின் அவதாரமென்றும், அரக்கரை (தமிழரை) ஒழித்துத் தேவரை (ஆரியரை)க் காக்கவே பிறந்தா னென்றும், 20 லக்ஷம் ஆண்டுகளுக்கு முன் 11000 வருடம் இருந்தானென்றும் எழுதிவைத்து மக்களை ஏமாற்றி விட்டனர். தமிழர்களின் குலப்பகைவனாகிய அவ்வாரிய அடிமையைத் தமிழர்களே கடவுளென நம்பி வணங்கும்படியும், தமிழர்களின் மாபெருந்தலைவனான இராவணனை அரக்கனென நம்பி வெறுக்கும்படியும் செய்துவிட்டனர். என்று தமிழ் மக்கள் உண்மையறிவு பெறுவார்களோ!

Library's copy imperfect: all after p. 64 wanting.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)=(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	...	...	ரூ. 0 5 0
பிரகிருதிவாதம்	...	...	,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	...	,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	...	...	,, 0 3
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன?	...	...	,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	...	...	,, 0 3 0
கடவுள்	...	...	,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	...	...	,, 0 3 0
வால்ட்டேர்	...	...	,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு	...	...	,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	...	...	,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	...	,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	...	...	,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்	0 6 0
,,	2-ம் பாகம்	0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0 4 0
,,	2-ம் பாகம்	0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண் தூரிமையும், மதமும்	...	...	,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”)	...	,,	0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா?	(ல. ப. நூ. பி.)		0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7	,, அயோத்தியாகாண்டம் (200பக்கம்)	0	8	0
8	,, ஆரண்யகாண்டம்	0	4	0
9	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன், தான்காமபதிப்பு200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாட்டு	0	2	0
18	கதர் முக்கியம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19	பர்னார்டஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	சு. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சாதி ஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிப்ரூவம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	ரகசியம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது வைவல்யம்கட்டுரை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnaswamy at the Unmai vilakam Press. Erode.